சிவாஜி

லண்டனில் நடக்கவிருக்கும் காமன்வெல்த் மகாநாடு

இந்தியாவின் நிலைமை

பண்டித நேரு விளக்கம்

லண்டனில் மற்றொரு காமன் வெல்த் மகாநாடு அடுத்த வாரம் ஆரம்பிக்கப் போகிறது. அதற்கான முன் கூட்டிய ஏற்பாடுகள் எல்லாம் இப்போது நடைபெற்று வருகின்றன.

காமன் வெல்த் உறவு சம்பந்தமாக **டெயிலி மெயில்** என்ற லண்டன் பத்திரிகை நிருபருக்கு பண்டித நேரு அளித்த பேட்டி நம் கவனத்தைக் கவருவதாக இருக்கிறது.

இந்தியாவின் வருங்கால அரசியல் நிலைக்கும், காமன் வெல்த் நாடுகளின் பரஸ்பர உறவுக்கும் உள்ள சம்பந்தம் பற்றியே பண்டித நேரு மேற்படி நிருபரிடம் விபரமாகப் பேசியிருக்கிறார்.

இந்தியா வருங்காலத்தில **குடியரசாக** இருப்பதென்று முடிவு செய்திருப்பது நேயர்களுக்குத் தெரியும். இப்படி குடியரசாக மாறினால் காமன் வெல்த் கூட்டுறவில் இந்தியா அவ்வளவு சௌகரியத்துடன் இடம் பெற முடியாது என்பதே ஆஸ்டிரேலியாவும், நியூசிலாந்தும் கொண்டுள்ள கருத்துக்களாகும்.

ஆனால் பண்டித நேரு இந்தக் கருத்துக்களுக்கு ஒப்பவில்லை. காமன்வெல்த் கூட்டுறவுக்கும், இந்தியா **குடியரசாக** இருப்பதற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்று தெளிவாக விளக்கியிருக்கிறார்

டெயிலிமெயில் நிருபர் திரு. வார்டு பிரைஸ் என்பார், காமன்வெல்த் கூட்டுறவின் தற்காப்புக்கு இந்தியா உதவி செய்ய நேருமா என்று கேட்டதற்கு நேரு அளித்திருக்கும் பதில் தெளிவாகவும், அதே சமயத்தில், ராஜ தந்திரமும் நிறைந்திருக்கிறது

இந்தியா தன்னைப் போருக்கு இழுத்துவிடக்கூடிய எவ்விதமான ஒப்பந்தத்திலும் இணைத்துக்கொள்வது நலமல்ல என்று நேரு நன்றாக விளக்கியுள்ளார். நேருவின் பேட்டி லண்டன் வட்டாரங்களில் தக்க கவனத்துக்கு ஆளாகிறது என்றால், அது ஒரு முக்கியமான கொள்கையை அறிவுறுத்துகிறது என்று விளக்கத்தேவையில்லை.

பண்டித நேருவின் அழைப்பின் பேரில் பர்மிய பிரதமர் தாகின் நூ இந்தியா வந்திருக்கிறார். இதற்கும் காமன்வெல்த் உறவு மகாநாட்டுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்க நியாயமிருக்கிறது. பர்மாவில் இருக்கும் இன்றைய அரசியல் நிலை மிகவும் கோரமானதாக இருக்கிறது. அதுபற்றியே காமன்வெல்த் மகாநாட்டில் முக்கியமாக பிரஸ்தாபம் ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது அட்லாண்டிக் உடன்படிக்கையைப் பின்பற்றிய பேச்சுவார்த்தைகள் நடத்தவே இந்த காமன்வெல்த் மகாநாடு நடைபெறுகிறது என்று நாம் கருதுகிறோம். இம்மகாநாட்டில் காமன்வெல்த் உறவுகள் பற்றிய சர்ச்சை முழுவதும் காமன்வெல்த் நாடுகளது தற்காப்பு, பரஸ்பர உதவி இவற்றைச் சார்ந்தே நிற்கும்.

பண்டித நேரு **டெயிலிமெயில்** நிருபருக்களித்த பேட்டியில் தெரிவித்தது காமன்வெல்த் மகாநாட்டினரால் எவ்வாறு எடுத்துக் கொள்ளப்படும் என்பது இப்போது விளங்கவில்லை. எனினும் நேருவின் இந்த அறிவிப்பின் மூலம் காமன்வெல்த் மகாநாட்டினரிடையே இருந்திருக்கக் கூடிய சிறிய சந்தேகங்களும் அகன்றிருக்கும் என்றே எண்ணுகிறோம்.

சர்வதேச அரசியலில் இந்தியாவின் இன்றைய நிலை ஒன்றிலும் பட்டுக்கொள்ளமுடியாத நிலையாகும். உள்நாட்டு பிரச்னைகள் ஏராளமாக அதன் கண்முன்னர் அகன்று கிடக்கும்போது சர்வதேச விஷயங்களை அது எவ்வாறு கவனிக்க முடியும்? மேலும் அப்படி கவனிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும் கூடுமான வரையில் தன்னை எந்த நெருக்கமான நிலையிலும் சிக்கவைத்துக் கொள்ளாமல் 'தப்பித்துக்கொள்ளவே' இந்தியா முயற்சி செய்யும்.

பண்டித நேருவின் அறிவிப்பு காமன்வெல்த் உறவு முறை பற்றிய கேள்விகளுக்கு அளித்த பதிலிலிருந்து காமன்வெல்த்துக் குள்ளேயே இந்தியா வெகு காலம் நீடித்து இருக்கப்போகிறதா, இல்லையா என்பது விளங்கவில்லை. காமன் வெல்த்தில் நீடித்து இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் அதற்கு ஏற்படும் பட்சத்தில் அது வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று மாத்திரம் எச்சரிக்க விரும்புகிறோம்.

ஹெலி காப்டர்

பிரிட்டனில் 'ஹெலிகாப்டர்' விமானங்கள் தற்போது விஸ்தாரமாக உபயோகப்பட வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. உள் நாட்டு விவகாரங்களில் அவை தற்போது பெரும்பாலான துறைகளில் பயன்பட்டு வருகின்றன உள்ளூர் தபால்களை அவை இடம் விட்டு இடம் பெயர்த்துச் சென்று ஒழுங்காக பட்டுவாடா செய்யும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன. மேலே கண்டுள்ள படம் ஹெலிகாப்டரின் இத்தகைய உபயோகமொன்றைச் சித்தரிக்கிறது. தபால்களின் பட்டுவாடாவில் ஹெலிகாப்டர் விமானம் காட்டும் ஊக்கம் அதன் முக்கியமான வேலையைத் தெளிவுற எடுத்துக்காட்டுவதுடன், இது போன்ற அநேக வேலைகளுக்கு அது பயன்படுமென்பதை நிரூபிக்கிறது.

17-4-49 (சிறுவர் மலருடன்) விலை அணா 2

"ராணா"

இருபதாம் அத்தியாயம்

அவுரங்கசீப்

மூராத்தின் கைவசம் இருந்த ராஜப் பிரதிநிதிப் பதவி அவுரங்கசீபின் கைக்கு மாறிற்று. இந்த மாற்றத்தினால் நேர்ந்த பேதம் நன்றாக வெளியில் தெரிவதாய் இருந்தது. மூராத் இருந்த காலத்தில் சோம்பிக் கிடந்த ராஜப் பிரதிநிதி காரியாலயத்தில் திடீரென்று சலசலப்பு தோன்றியது. அந்தக் காரியாலயம் முழுவதும் புதிய துடிப்புடன் விளங்கியது.

பிற்காலத்தில் தனது ராஜதந்திரத்தாலும், ஈவு இரக்கமற்ற கொள்கைகளாலும் பாதுஷாவாகப்போகும் அவுரங்கசீபின் வாழ்க்கைக்கு ஏற்ற முன் கூட்டிய சூசகங்கள் அவர் பதவி வகித்த ராஜப் பிரதிநிதி காரியாலயத்திலும் பலமாகத் தென்பட ஆரம்பித்தன.

விடியற் காலையிலேயே சுருசுருப்பாக எழுந்திருந்து தம் காலைக் கடன்களை முடித்துவிட்டு, அரசியல் வேலையை சாங்கோபாங்கமாக ஆரம்பிப்பார் அவுரங்கசீப். அவர் எடுத்துக் கொள்ளும் ஓய்வு மிகக் குறைவாய் இருக்கும். அவருடைய தேவைகளும் ரொம்பச் சொற்பமானவை. அவற்றை அவர் எளிசாக முடித்துக்கொண்டு அரசியல் வேலையில் தீவிரமான ஆர்வம் காட்டினார்.

சிவாஜி இந்த மாற்றத்தை கவனிக்காமல் போகவில்லை. தனது நடவடிக்கைகளுக்கு இதுகாறும் இருந்த எதிர்ப்பை விட பலமானதொரு எதிர்ப்பு இனிதான் ஆரம்பமாகப் போகிறது என்பதை அவன் நன்றாக உணர்ந்திருந்தான். எனினும் தனது புகழும், செல்வாக்கும், பலமும் ஓங்குவதற்கு இந்த மாற்றமே தக்க சந்தர்ப்பம் அளிக்கும் என்ற உண்மை அவனைத் துள்ள வைத்தது.

அவுரங்கசீப் ராஜப் பிரதிநிதியாக வந்தவுடன் முதலாவதாகவே பீஜபுரி பிராந்தியத்தின் பக்கம் கண்ணைத் திருப்பினார். சிவாஜிக்கு உள்ளூற ஒருவித நடுக்கம் ஏற்பட்டது வாஸ்தவம் தான். எனினும் வருவதைத் தடுக்க முடியாது என்ற தோரணையில் அவன் அவுரங்கசீபின் நடவடிக்கைகளை கவனித்து வந்தான்.

இத்துடன் அவன் அவுரங்கசீபுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினான். அவருக்கு முன்பு ராஜப் பிரதிநிதியாக இருந்தவர் தன்னிடம் கருணை காட்டியதாகவும், அவுரங்கசீபும் அப்படியிருக்கத் தவறக் கூடாதென்றும், இன்னும் என்னவெல்லாமோ அக்கடிதத்தில் கூறினான். அவுரங்கசீப் சிவாஜியின் கடிதங்களைப் பார்த்துவிட்டு மிகவும் அலட்சியமாக அவற்றை ஒதுக்கிப் போட்டு வைத்தார். உண்மையில் அவற்றிற்கு அவரிடமிருந்து பதிலே கிளம்பியதாகத் தெரியவில்லை அப்படி கிளம்பியிருந்தாலும் அவற்றில் விசேஷமாக ஏதும் இருந்திருக்க முடியாதென்று நிச்சயமாகச் சொல்லலாம்

இதனிடையில் சிவாஜி பூர்வாங்கமாகத் தன் காரியங்கள் சிலவற்றைச் செய்துகொண்டான். தான் முதன் முதலில் கைப்பற்றிய கல்யாண் கோட்டையை விடுத்துத் தன் படைகளை மீட்டுக்கொண்டு காட்டுப் பிராந்தியங்களில் அவற்றை நிறுத்தி வைத்துக்கொண்டு மேற்கொண்டு சம்பவங்களுக்காகக் காத்திருந்தான். கல்யாண் கோட்டை உடனடியாக ஒரு முகம்மதிய வீரனால் கைப்பற்றப்பட்டு அவனது படைகள் அங்கு வைக்கப்பட்டிருந்தன. அவன் அந்தக்காலத்தில் மொகலாயருக்கு உற்ற துணையாக இருந்துவந்தான்.

பீஜபுரியைப் பொறுத்தவரையில் அவுரங்கசீபுக்கு எழுந்த உணர்ச்சிகள் மத சம்பந்தமானவைதான் என்றே சொல்லிவிடலாம். பீஜபுரி பரம்பரையினர் தங்கள் ஆட்டோமன் வம்சாவளியை மீறியும், கலீபுடன் தாங்கள் கொண்டாடிய விசேஷ உறவுகளை மீறியும், ஷியா மதத்தை அரவணைத்திருந்தனர். அவுரங்கசீப் இதற்கு நேர் விரோதமான மதத்தைச் சேர்ந்தவர்.

பீஜபுரியினர் ஷியாக்களாக மாத்திரம் இருக்கவில்லை. அந்த மதத்திற்குரித்தான வெளி படாடோபங்களில் லயித்து மூழ்கியிருந்தார்கள். கிரேக்க, இத்தாலிய கலாசாரத்தில் அவர்களுக்கிருந்த மோகம் சொல்லத்தக்கதன்று. பீஜபுரி நகரம் முழுவதும் கணக்கற்ற சிலைகளும், தடாகங்களும், வர்ண விசித்ரம் பூண்ட சித்திரப் பலகைகளும், அடங்கியிருந்ததுடன், இத்தாலியக் கலைஞரும், கிரேக்க சிற்பிகளும் அங்கு செல்வாக்குடன் நடமாடி வந்தனர். அவுரங்கசீபுக்கு இந்தக் காட்சி கண்ணை உறுத்துவதாயிருந்தது.

அவுரங்கசீப் பதவி யேற்று வெகு விரைவில் பீஜபுரியின் மேல் படையெடுப்பதற்கு ஆயத்தம் செய்துவிட்டார். அவரது லட்சியம் பீஜபுரியைத் தம் வசமாக்கிவிடுவது மாத்திரமல்ல— அந்நகரத்தை அழித்துத் தூளாக்கி, அங்குள்ள சிலைகளையும், தடாகங்களையும் பாழடிக்க வேண்டும் என்ற உணர்ச்சியே அவருக்கு ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் பீஜபுரி அரசாங்கம் எந்தக் கணத்திலும் யுத்தம் நிச்சயம் ஆரம்பிக்கும் என்ற விஷயத்தை நன்றாக உணர்ந்தது. எனவே முதன் முதலில் சிவாஜியை எப்படியாவது இதற்கு முன்னால் ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்குண்டு. விரைவில் இதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பமும் ஏற்பட்டது.

சிவாஜியைக் கொலை செய்வதற்கென்று ரகசியமாகத் தயார் செய்யப்பட்டிருந்த ஒருவன் யதேச்சையாக மூர் என்ற மராத்தியனது மாகாணத்தின் வழியாகச் சென்றான். உண்மையில் அந்தக் கொலைகாரன் மூரின் மாகாணத்துக்குள்ளிருந்தே சிவாஜியை ரகசியமாகக் கொலை செய்வதற்குரிய சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தான்.

இந்த மூர் என்பவனுடன் முன்னொரு காலத்தில் சிவாஜியின் தாய் ஜீஜாபாய் ஏதோ பேச்சு வார்த்தை நடத்தியிருந்தாள். ஆனால் அது ஒன்றும் உற்ற பனென் அளிக்கவில்லை. சிவாஜிக்கு மூரின் பெண்ணைத் திருமணமூலம் கொடுப்பதே இந்த யோசனை.

தனது பெண்ணைக் கேட்ட சிவாஜியின் சமீபகாலப் பிராபல்யத்தைக் கண்டு பொறாமையுற்றோ, அல்லது பீஜபுரி அரசவையின் ரகசியமான வேண்டுகோளின் காரணமாகவோ, மூர் அந்தக் கொலைகாரனுக்குத் தன் மாகாணத்துக்குள் புகலிடம் கொடுத்துக் காப்பாற்றிவந்தான்.

சிவாஜி இதை உன்னிப்பாகக் கவனித்துவந்தான். ரகசிய தூதர் மூலம் மூருக்கும் பீஜபுரி அரசவைக்கும் இருந்த நெருங்கிய தொடர்பு பற்றிய சேதி அவனுக்குக் கிட்டியவுடன் அவன் ஒரு காரியம் செய்தான். தன் தூதர்களில் இருவரை அனுப்பி உடனடியாகத் தன்னுடன் சிநேக உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டுமென்று கோரினான்.

மூர் இதற்கு முதலில் பதிலே சொல்லாமற் சிறிது காலம் போக்கினான். சிவாஜியின் துருப்புகள் தன் மாகாணத்தை நாற்புறமும் வளைத்துக்கொண்டு விட்டன என்று தெரிந்ததும், தனக்கொன்றும் தெரியாதென்றும், சிவாஜி செய்வதெல்லாம் அக்கிரமமென்றும் ஏதேதோ பிதற்றினான். கடைசியில் அருகே இருந்து பேசிக்கொண்டிருந்த சிவாஜியின் ஆள் ஒருவன் கத்தியை உருவி மூரைச் சாய்த்துவிட்டான் சிவாஜி விரைவில் மூரின் மாகாணத்தைக் கைப்பற்றிக் கொண்டதுடன், மூரின் பிரதான சேடனாயிருந்த பாஜி பிரபுவைத் தன் சேடனாக்கிக்கொண்டான். இந்த பாஜி பிரபுவின் சேவை மகத்தானது. பிற்காலத்தில் ராங்கணாவில் முதல்வன் சிவாஜிக்காகத் தன் உயிரையேகூட தியாகம் செய்தான் இந்த பாஜிபிரபு.

இவ்வாறாக சிவாஜியை ரகசியமாகச் சாய்த்துவிடச் செய்த முயற்சி தோல்வி யடைந்ததுடனில்லாமல், சிவாஜியின் பலம் இன்னும் அதிகரித்தது கண்டு பீஜபுரி அரசாங்கம் நடுநடுக்கமுற்றுப் போயிற்று.

1656-ம் ஆண்டுவந்தது. அவுரங்கசீப் தக்ஷிண ராஜப் பிரதிநிதியாகி சரியாக ஆறு முழு ஆண்டுகள் கடந்துவிட்டன. பீஜபுரியின் மேல் படையெடுக்கும் ஆயத்தங்களெல்லாம் முடிந்து காரணத்துக்காகக் காத்திருந்தார் அவுரங்கசீப். காரணமும் வந்து சேர்ந்தது.

பீஜபுரி சுல்தான் இறந்து அவருக்குப்பின் யார் பட்டம் தரிப்பது என்ற குழப்பம் ஏற்பட்டிருந்தது. நீண்ட சச்சரவுகளுக்கிடையில் அலி என்பான் பதவி வகித்துவந்தான். அரண்மனைக்கு உள்ளும், வெளியும் இந்த ஆரவாரம் நிறைந்திருந்தது.

அவுரங்கசீப் நிலையைத் தெளிவாகத் தந்தைக்கு எடுத்துக் காட்டும் முறையில் கடிதம் எழுதினார். பீஜபுரியில் புதிதாகப் பட்டத்துக்கு வந்த அலி தான் மொகலாயருக்கு செய்ய வேண்டிய தாசக்ரியைகளைச் செய்யவேயில்லை யென்று சுட்டிக் காட்டினார். பாதுஷா "ஆம்" என்று கூறியதுடன், படையெடுக்கவும் அனுமதி கொடுத்துவிட்டார்.

இந்த நிலையில் 1657-ம் ஆண்டு ஆரம்பத்தில் அவுரங்கசீபின் படைகள் தெற்கு நோக்கிப் பிரயாணமாயின. மொகலா

(15-ம் பக்கம் பார்க்க)

பட்டு, நூல் சேலைகள், ஜங்கிளா,
பனாரஸ் பட்டு புடவைகள்
மிகவும் நூதன பார்டர்களில்
கிடைக்குமிடம் :

கல்யாணகாலம் ! கைராசி !! நாணயம் !!!

M. N. நாகேந்திரம் சன்ஸ்,
மலைவாசல், தெப்பகுளம் P. O. திருச்சி.

தென்கிழக்கு ஆசியா

சீனாவிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் நடந்துவரும் உரிமைப்போராட்டங்கள் உலக சரித்திரத்தையே மாற்றுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தி வருகின்றன. காலப்போக்கில் அவை உலகின் மற்றைய பிராந்தியங்களில் நடந்துவரும் சம்பவங்களைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையென்று நிரூபிக்கப்படும்.

— டாக்டர் இவாட்.

சிவாஜி

ஆசிரியர் :— திருலோக சீதாராம்

கோட்டை	திருச்சி, 17—4—49	முற்றுகை
14	விரோதி-ஞு சித்திரை-மீ, 5-உ	20

மார்ஷல் உதவி

மார்ஷல் உதவி தற்போது உலகில் முற்போக்கான பகுதிகளுக்கு கிடைத்து வருகிறது. பிற்போக்கான பகுதிகளுக்கு இந்த உதவி இதுகாறும் கிடைக்கவில்லை. காரணம் இவற்றில் மூலதனங்கள் மிகக் குறைவு என்று கூறப்படுகிறது. உதவி கோரும் பிராந்தியங்களுக்கு இந்த உதவி கிடைக்காதிருப்பது வருந்தத்தக்க விஷயம்.

— ஸர். ஏ. ஆர். முதலியார்

விதுரர் போல் சென்ற ரெட்டியார்

"காண்டீப"த்தின் நெஞ்சுருக்கும் வாசகம்

தமிழ் நாட்டின் சாபத்தீடு

"துரியோதனன் சபையிலே விதுரர் வில்லை முறித்து எறிந்துவிட்டுச் சென்றுவிட்டார். துச்சாதனனின் வாய்த்துடுக்கும் துர்யோதனனின் அதர்மப் போக்கும் தான் விதுரர் இவ்வாறு மனமுடைந்து சென்றதற்குக் காரணம். இது எவ்வளவு பெரிய நஷ்டம் என்பதை துரியோதனாதியர் உணர முடியவில்லை. குருக்ஷேத்திரத்தில் காண்டிபனின் தாக்குதலை சகிக்க முடியாது இருந்தபோது தான் விதுரர் போனதன் கஷ்டம் தெரிந்தது."

இப்படித்தான் ஓமந்தூர் ரெட்டியார் பிரதமர் பதவியை விட்டு விதுரர் மாதிரி சென்றுவிட்டார் என்று "காண்டீபம்" தனது 8—4—49 இதழில் "நன்றிகெட்டவர்கள்" என்ற மகுடமிட்டு எழுதியுள்ள நெஞ்சுருக்கும் கட்டுரையில் குறிப்பிடுகிறது.

சென்னை மாகாணத்தில் விதுரர்கள் வில்லை முறித்துவிட்டுச் செல்வது இது முதல் தடவையல்ல. ராஜாஜியின் அடிச்சுவட்டிலே தான் ஓமந்தூராரும் இன்று சென்றிருக்கிறார். ராஜாஜி கவர்னர் ஜெனரலாகிவிட்டார். நிச்சயமாகக் கூறுகிறோம், ஓமந்தூர் நமது கவர்னராகவே வரக்கூடும். அந்தநாள் ஒன்று வரத்தான் செய்யும்.

ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. நமது மாகாணத்தில் தேச பக்தி இப்போது கானல் நீராகிவிட்டது. "போலிச் சுதேசிகள்" இப்போதுதான் தலைதூக்கியிருக்கிறார்கள்.

சட்டசபை மெம்பர்களுக்கு ஆண்டுதோறும் மந்திரிசபை மங்கள விழா நடத்துவது உற்சாகமான பண்டிகையாகி விட்டிருக்கிறது. அது அவர்களுக்குப் பொழுது போக்கும் சிறிய கதை—நமக்கெல்லாம்-மக்களுக்கெல்லாம் அது உயிரின் வாதை.

சீ, கடைசியில் இதற்குத்தானா இவ்வளவு அடி அடித்துக் கொண்டார்கள். ஒரு ஓமந்தூரையும் ஒரு அவினாசிலிங்கத்தையும் வீழ்த்தத்தானா இந்த ஜனநாயகப் பித்தலாட்டங்கள். வேண்டியதில்லையே, விதுரன் அன்று திருதராஷ்டிரனுக்குக் கூறியதுபோல இதைப் பளிச்சென்று அவர்களிடம் கேட்டிருந்தால் "யாவும் தானமெனக்" கொடுப்பாரே என்று சொல்லத் தோன்றுகிறது.

நல்ல மனிதனுக்குக் காலமில்லை யென்று கூறுகிறார்கள். நாம் அப்படிக் கூறிக் காலத்தின் பெருமையைக் கறைப்படுத்த விரும்பவில்லை. மனிதர்கள் நல்லவர்களாக மறுக்கிறார்கள் என்று சொன்னால் போதாதா?

நன்றிகெட்ட செயல் என்றால் இதைவிட வேறு எதைச் சொல்ல முடியும். மனிதத்தன்மையற்ற அசுரச் செயல்—பின்னாலிருந்து குத்தும் பேதமை—எப்படிச் சொன்னாலும் போதாது.

புதிய மந்திரிசபை என்று பெயரிட்டுக்கொள்ளவும் பவனி வரவும் பிரசங்கம் புரியவும் கொஞ்சமும் நாணமில்லை என்பதுதான் ஆச்சர்யம். புதிய மந்திரிசபையில் தங்களுக்கு இடம் வேண்டுமென்பதற்காகப் பழைய தலைவருக்குத் துரோகம் செய்வதை அரசியல் வியபிசாரம் என்று ஏன் சொல்லக்கூடாது?

திருவாளர் குமாரசாமி ராஜா பிரதம மந்திரியாக வந்திருப்பதைப்பற்றி விசேஷமாக நமக்கு அவரைப் பற்றித் தனி ஆக்ஷேபம் ஒன்றுமில்லை.

ஆனால் பழைய மந்திரி சபையை "ஒழித்துவிட்டுப்" "புதியதை" ஸ்தாபிக்கும் முயற்சி இருக்கும் போக்கைப் பார்க்கும் போது நமக்கு சிரிப்புத்தான் வருகிறது. இதில் யார் பழையவர், யார் புதியவர் என்று விளங்கவில்லை.

"1947-ம் வருஷம் ஸ்ரீ ரெட்டியார் பதவி ஏற்றார், இந்தப் பதவியை அவராக விரும்பிக் கேட்டு வாங்கவில்லை. மாகாணத்தின் நன்மையை உத்தேசித்து அவரை மற்றவர்கள் பதவியில் உட்கார வைத்தார்கள். பதவி ஏற்பதற்கு முன்பு ரெட்டியார் எப்படி இருந்தாரோ அதேபடிதான பதவி ஏற்றபிறகும் இருந்தார் என்பது அவரைக் கவனித்து வந்தவர்களுக்குத் தெரியும்." என்று உருக்கமாக எழுதுகிறது "காண்டிபம்", மேலும் தன் கட்டுரையில்.

ரெட்டியார் விரும்பிக் கேட்டு வாங்கினதோ, அல்லது தானாக வந்ததோ, தெரியாது. ஆனால் ஒன்றுமாத்திரம் நிச்சயம். அவர் அந்தப் பதவிக்குப் பொருத்தமான முறையில் நடந்துகொண்டதுடன் தன்னுடன் மந்திரி சபையில் சேர்ந்திருந்த மற்றைய அங்கத்தினர்களையும் தம்முடன் ஒத்துழைக்கச் சொல்லி எதிர் பார்த்தார்.

அந்த மந்திரிமார்கள் ஒத்துழைத்தனரோ, இல்லையோ; இப்போது மந்திரிசபையை விட்டு நிர்ப்பந்தமாகப் போகும் நிலைமை ஸ்ரீ ரெட்டியாருக்கு ஏற்பட்டுவிட்டது.

திரு. குமாரசாமி ராஜா புதிய பிரதமராக வந்திருப்பது குறித்து நமக்கு வருத்தமோ சந்தோஷமோ இரண்டும் கிடையாது. நமது மாகாண அரசியலில் நடந்துவரும் விரும்பத்தகாத நடவடிக்கைகளைக் குறித்துத்தான் நமக்குத் துயரம் உண்டாகிறது.

தற்போதுள்ள மந்திரிகள் பிரதமர் குமாரசாமி ராஜாவுடன் எவ்வளவுதூரம் ஒத்துழைப்பார்கள் என்பது தெரியாது. ஆனாலும், தற்போது அதுமாதிரி ஒத்துழைக்கும் மனப்பான்மையில்தான் இவர்கள் சேர்ந்திருக்கவேண்டும்! காலப்போக்கில் திரு. குமாரசாமி ராஜாவின் தலைமை சென்னை அரசியலில் ஊன்றப் பெறுமா அல்லது திடீரென்று ஏதாவது "கசமுசல்" தோன்றுமா என்பவை இப்போது கூறுவதற்குக் கடினமான விஷயங்கள்.

நாம் கூறுவதெல்லாம் இதுதான். பிரதமர் ரெட்டியாரை மாத்திரம் விலக்குவதற்கு இவ்வளவு 'அமர்க்களங்கள்' ஏற்பட்டிருக்கவேண்டாம்.

இதில் வேடிக்கை யென்னவென்றால் திரு ராஜாவை பிரதமராக்குவதற்கு நடந்த வாக்கெடுப்பில் அவருக்குக் கிடைத்த வோட்டுகளின் எண்ணிக்கை கொஞ்சம் தவறியிருந்தால் இன்னொருவருக்குப் போயிருக்குமென்பதுதான்.

சென்னை சட்டசபைக்கும், மந்திரி சபைக்கும் இன்று இருந்துவரும் லட்சிய நிர்ணயமற்ற மனப்பான்மை நம்மைத் துயரத்திலாழ்த்துகிறது. திரு ராஜா பிரதமராக வருகிறாரா, திரு. ஓமந்தூரார் இருக்கிறாரா என்பது நம் கவலையல்ல. எதற்தாக இத்தகைய மாற்றங்கள் இப்படி ஏற்படவேண்டும் என்பதுதான் நமக்குத் துளிக்கூட விளங்கவில்லை.

✱

பித்தளை, தாம்பூரம், வெண்கலம் அலுமினியம், எவர்சில்வர் பாத்திரங்கள் உத்திவாதமுடன் கிடைக்குமிடம் →

திருநெல்வேலி பாத்திரக்கடை

பெரியகடைவீதி - திருச்சிராப்பள்ளி ~ (H.O. திருநெல்வேலிடவுன்)

Proprs: S.V. கந்தசுவாமி பிள்ளை சன்ஸ்

அனுபவ ஞானியின் குறிப்புகள்



திருலோக சீதாராம்

அமெரிக்கருக்கும் அதிசய மனிதர்

திருவாளர் நாயுடு அமெரிக்காவில் தங்கியிருந்தபோது இரண்டாவது உலகயுத்தம் தொடங்கிவிட்டதென்று குறிப்பிட்டேனல்லவா? உலகின் மற்ற பாகங்களில் ஹிட்லர் ஒரு மாபெரும் அவதார புருஷனாகப் பலருக்குத் தோன்றியது போலவே அமெரிக்காவிலும் ஒரு சாராருக்கு ஹிட்லரிடம் மட்டற்ற மதிப்பும் அன்பும் இருந்ததை அவர் அறிந்தார். இடைவிடாத பிரசார வேகத்தினால் உலகப்புகழ் பெற்றுவிட்ட ஹிட்லரைப்பற்றி அமெரிக்கப் பொதுக்கூட்டங்களில் மக்கள் நாயுடு அவர்களிடம் அவருடைய கருத்தையறிய விரும்பினார்கள். பத்திரிகைச் செய்திகள், ரேடியோ அறிவிப்புகள் தவிர ஜெர்மனிக்குச் சென்றறியாதவர்களின் மனப்பாங்கு எப்படியிருந்திருக்குமென்பதைச் சொல்ல வேண்டியதில்லையல்லவா? நாஜியர் பங்கில் அனுதாபம் கொண்ட ஒரு கூட்டத்தின அவர் பேசும்போது பலரும் பல ரிடையே விதமான கேள்விகளைக் கேட்டனர். நாயுடு கூட்டத்தினரைப்பார்த்து "உங்களில் எத்தனைபேர் ஜெர்மனிக்கு நேரே சென்றிருக்கிறீர்கள்?" என்று கேட்டபோது சில விநாடிகள் சபையில் ஒரே மௌனம் நிலவியிருந்ததாம். பிறகு நாயுடு பின்வருமாறு பேசினார். "சரி, நான் ஜர்மனிக்குப் பல தடவைகள் சென்றிருக்கிறேன். நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் கூடச் சுற்றித் திரிந்திருக்கிறேன். நீங்கள் நம்புவது போல நாஜியம் மனித குலத்திற்குப் பெரிய வரப்பிரசாதம் அல்லவே அல்ல என்பதை நான் ஆராய்ந்து முடிவு செய்திருக்கிறேன்" என்று. கூட்டத்தினர் நாயுடுவின் கருத்தை ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்பதில் தடையில்லை. நேரே சென்று ஆராய்ந்து வந்தவர் தங்கள் மதிப்புக்கும் வியப்புக்கும் பாத்திரமான இந்தியர்; அவர் சொல்வதில் உண்மையிருக்கவேண்டுமல்லவா?

நாயுடு அவர்கள் ரஷ்யாவைப் பற்றிக்கூட இதே போலத்தான் தன் அபிப்ராயத்தை சமீபத்தில் வெளியிட்டார். சென்ற டிசம்பரில் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து **மூலதனத் தொழில்** என்பது பற்றி அவர் நிகழ்த்திய அருமையான சொற்பெருக்கில் அவர் குறிப்பிட்டதாவது: "பத்திரிகைகளில்வரும் அற்புதமான சித்திரங்களிலோ, போய்வந்தவராகக் கூறிக்கொள்ளுவோர் சிலர் கூறியவற்றிலோ, ரஷ்யாவைப்பற்றிய நூல்களிலோ காணப்படுவதுபோன்ற பொதுவுடமைப் பேரின்ப வாழ்வு வாழும் ரஷ்யாவை நான் நேரில் சென்றபோது காணமுடியவில்லை" என்று.

நாயுடு அவர்களின் அமெரிக்க சுற்றுப் பிரயாணத்தில் அவர் பல புதிய விஷயங்களைக் கற்றுத் தெரிந்து பயன் அடைந்தது போலவே அமெரிக்க மக்களும் அவருடைய விஜயத்தால் அளவற்ற பயன அடைந்திருக்கிறார்கள்.

சிகாகோ நகரத்தில் அவர் ஷெர்மன் ஹோட்டலில் தங்கியிருந்தபோது அவ்வூரிலுள்ள வார்னர் எலெக்ட்ரிக் கம்பெனியின் உபதலைவரான **டிரேபர்** என்பவர் நாயுடுவுடன் தான் கலந்து பழகியிருந்ததனால் ஏற்பட்ட மகிழ்ச்சியைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதைப்படிக்கும்போது எத்தகைய பேரறிஞர் நாயுடு என்பதும் அவருடைய சிறப்பை அவர் பிறந்து வாழும் தமிழ் நாட்டில் இன்னும் யாரும் உணர்ந்தபாடில்லையே என்ற வருத்தமுமே நமக்கு ஏற்படுகிறது. மேலே குறிப்பிட்ட கடிதத்தின் வாசகம் பின்வருமாறு:-

"அன்புள்ள திரு. நாயுடு, உங்களின் வருகையை நான் எவ்வளவு வாழ்த்துகிறேன் என்பதை அறிவிக்கும் வாய்ப்பு ஏற்பட்டதுபற்றி மகிழ்ச்சியடைகிறேன். பழகக் கிடைத்த சிறிது நேரத்தில் என் வாழ்வைப் பொன்னாக்கிக்கொண்டேன். தங்களிடமிருந்து மிகப்பெரும் அறிவை நான் பெற்றுக்கொள்ள கொடுத்துவைத்தேன். தங்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றக் கூடிய வலிமைதான் இனி எனக்கு வேண்டும். நான் படித்துப்பயன் பெறக்கூடிய சில நூல்களை எனக்களிப்பதாக வாக்களித்தீர்கள். ஒருக்கால் தாங்கள் ஊர் திரும்பிய பிறகு எனக்கு அவற்றை அனுப்பி உதவுவீர்களென்று நினைக்கிறேன். அதை நினைவூட்ட நான் இதை எழுதுவதாகக் கற்பித்துக்கொள்ள வேண்டாம். தங்கள் தொழில் நலனுக்கு மட்டுமேயல்லாது தங்கள் தாய் நாட்டின் மேன்மைக்காகத் தாங்கள் எவ்வளவு அரும்பாடுபட்டு வருகிறீர்களென்பதை நன்கு உணர்ந்திருக்கிறேன். சுகமே நீங்கள் ஊர் திரும்பியபின்னர் உலகம் முழுவதிலும் ஆங்காங்கு சிதறிக் கிடக்கும் தங்கள் மெய்யன்பர்களில் ஒருவனாக எனக்கும் சிறிது தங்கள் நினைவில் இடம் கிடைத்தால் அதுவே தாங்கள் எனக்கருளும் பரிசு."...

1940-ம் வருஷம் ஜனவரி மாதம் 14-ம் தேதி திரு. நாயுடு அவர்கள் காயின் மெஷின் கன்வென்ஷனை யொட்டிய 'பூத்' ஒன்றில், சில்லறை போட்டு 'சாகலேட்' வவழைக்கும் யந்திரம் ஒன்றைப் பார்வையிடும் காட்சி.

கோடிக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்று வருவது

வீல்மார்க் சென்னீஸ் வைரங்கள் & விக்டரி ஸ்டார் வைரங்கள்

தயாரிப்பவர்:—
சென்னி ராதாகிருஷ்ணன்,
பெரியபஜார்,
திருச்சினப்பள்ளி.

வாஷிங்டன் நகரிலுள்ள கார்ப்பரேடர் சர்வீஸ் கம்பெனியின் அதிகாரி திரு. ரே என்பவர் நாயுடு அவர்களுடன் உடனிருந்த டாக்டர் ஒருவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் நாயுடு அவர்களைப்பற்றிக் குறிப்பிடுகிறார். இது 20—5—40-ல் எழுதப்பட்டது. "அன்பார்ந்த டாக்டர் அவர்களே, சென்ற சனிக்கிழமை மாலை விளையாட்டுத் திடலில் நடைபெற்ற போட்டிப் பந்தயங்களைப்பார்க்க நாம் சென்றிருந்தோமல்லவா? அச்சமயத்தில் நாயுடு அவர்களின் மனோவசிய சக்தியைக் கண்டபோது நான் ஆச்சரியமடைந்துவிட்டேன்.

"மற்ற மனிதர்களின் நினைவைத் தன் உள்ளத்திட்பத்தாலோ வேறு எந்த மாயத்தாலோ தடுத்து நிறுத்திவிடுவதை நான் நேரே கண்டு அதிசயித்தேன். நாயுடு அந்த வாலிபப் பெண்ணைப் பதில் பேசாமல் நிற்கும்படி செய்தபோது அவருடைய நினைவுத் தேக்கத்தைக் கலைக்க நான் முயற்சித்ததுண்டு. நாயுடு அவர்கள் அவளிடமிருந்து தன் கட்டளையை மீட்டுக்கொள்ளாத காரணத்தால் அவள் என் கேள்விகளுக்குப் பதில்கூறச் சக்தியற்று நின்றுவிட்டது அற்புதமாகும். அந்தக் காட்சியை நினைக்கும்தோறும் என் உள்ளக் கிளர்ச்சி அதிகரிக்கிறது. அன்று ஹோட்டலுக்குத் திரும்பிய பின்னர் நெடுநேரம் எங்களுக்குள் இதேதான் பேச்சாக இருந்தது. ஹோட்டலில் தங்கியிருந்தபோது நாயுடு அவர்கள் தன் தாய் நாட்டைப்பற்றியும் பல புதுமைகளைக் கூறியதுடன் மனோதத்துவ ரீதியான பல அரிய விஞ்ஞான உண்மைகளை அழகாகவும் விரிவாகவும் எங்களுக்கு எடுத்துரைத்தார். எனக்கு அற்புதமாகப்பட்ட இந்த விஷயங்களைப்பற்றி விடியற்காலை 2-மணிவரையிலும் அவருடன் பேசிக்கொண்டிருந்தேன். வேறு பல சந்தர்ப்பங்களிலும் அவருடன் கூடியிருந்து உணவருந்தும் வாய்ப்பும் எனக்கு ஏற்பட்டதுண்டு. ஒவ்வொரு சந்திப்பின்போதும் இந்த அதிசய மனிதர் தன்னுட்டு உடையிலேயே காட்சி அளித்தது எவ்வளவோ மேன்மையாக இருந்தது. மிருகக் காட்சி சாலைக்கு திரு நாயுடுவும் திரு. ஜானும் போயிருந்தபோது நானும் கூட இல்லாமல் போய்விட்டது என் துர்ப்பாக்கியம்தான். அந்தப் பாம்பை அவர் 'ஆட்டிவைத்த' செய்தி நம்பவே முடியவில்லை. ஜானைத்தவிர வேறு யாராவது எனக்கு இதைச் சொல்லியிருந்தால் வெறும் கதையென்றுதான் நான் தள்ளியிருப்பேன்."

இத்தகைய கடிதங்கள் எத்தனையோ நாயுடு அவர்களின் சேகரங்களில் காணலாகும். அமெரிக்கத் தொழில் விஞ்ஞான சாதனைகளைக் கண்டு வியந்து அவற்றைக் கற்றுவந்த நாயுடு அமெரிக்கருக்கு அதிசய மனிதராகவும் காட்சியளித்து வந்திருப்பது நமக்குப் பெருமைதரும் செய்தியாகும்.

✱

பட்டினியிலிருந்து
நம்மை டீ எப்படிக்
காப்பாற்றுகிறது?

அயல்நாட்டு நாணயச் செலாவணி நம் நாட்டுக்கு இன்று மிகவும் அவசியமாக இருக்கையில்; நாம் ஏற்றுமதி செய்யும் 40 கோடி பவுண்டு தேயிலை, அவசியமான உணவுப் பொருள்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய ஏராளமான தொகையை அளிக்கிறது. டீ நம் நாட்டு கலாசாரத் தாதர்மட்டுமல்ல, பட்டினியைத் தடுக்க உத்திரவாதமும் அளிக்கிறது. ஏற்றுமதித் தொழிலில் இரண்டாவதாக நிற்கும் டீத்தொழில் நாட்டின் பொருளாதாரத் துறையில பிரதான ஸ்தானம் வகிக்கிறது.

டீயைப்பற்றிய சில உண்மை விவரங்கள்

- ★ ஏழு லக்ஷம் ஏக்ரா நிலத்தில் வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு டீ உற்பத்தி செய்கிறோம்.
- ★ இத் தொழிலில் 10 லக்ஷம் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்.
- ★ உள் நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணு வரியும், ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணு வரியும் சர்க்காருக்குக் கிடைக்கிறது. நாட்டு கஜானுவுக்கு வருஷமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
- ★ மேலும் டீ கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

டீ
ஒரு மகத்தான இந்தியக் கைத்தொழில்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

லிப்டன்ஸ்
என்றால் முதல்தரமான டீ

சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கேன்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினேம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 17—4—49

தென் மேற்கு ஆப்பிரிக்கா

டாக்டர் டேனியல் மலான் கடைசியாகத் தென்மேற்கு ஆப்பிரிக்காவையும் தன் ஆட்சியில் கொண்டுவருவதற்கான ஏற்பாடு செய்துவிட்டார். தென்மேற்கு ஆப்பிரிக்கா இதுகாறும் தென் ஆப்பிரிக்க யூனியனின் மேற்பார்வையில் லீக் ஆப் நேஷன்ஸினுல் மாண்டேட் ஆகவிடப்பட்டிருந்தது நேயர்களுக்குத் தெரியும். இந்த 'மாண்டேட்' கொடுபட்ட காலத்தில் ஒரு முக்கியமான நிபந்தனை இருந்தது. மாண்டேட்டின் வாசகத்தில் ஏதாவது மாற்றங்கள் செய்வதற்கு முன்னுல் லீகின் சம்மதத்தைப் பெற வேண்டுமென்பது இந்த நிபந்தனை. ஆனல் இந்த நிபந்தனையை டாக்டர் மலான் கவனித்ததாகவே தெரியவில்லை.

மாண்டேட்டின் நிபந்தனையை மீறியதோடு மாத்திரமல்லாமல் ஐக்கிய நாடுகள் சபை மும்முறை தெளிவாகத் தெரிவித்த கருத்தையும் அலட்சியமாக ஒதுக்கித் தள்ளியிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டம் தென்மேற்கு ஆப்பிரிக்கா சம்மந்தமாகத்தென் ஆப்பிரிக்க யூனியன் ஒரு "ட்ரஸ்டிஷிப்" ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும் என்று கூறியிருந்ததை கவனிக்கவேயில்லை.

இந்த நிலையில் மலான் கூறும் வார்த்தைகள் விநோதமாக இருக்கின்றன தாம் கொண்டுவந்த மசோதாவின் மூலம் தென் மேற்கு ஆப்பிரிக்காவுக்கு யூனியன் பாராளுமன்றத்தில் நிறையப் பிரதிநிதித்துவம் கொடுத்துவிட்டதாகப் பசப்புகிருர் டாக்டர் மலான். மசோதா கொண்டுவரப்படு முன்னர் ஆப்பிரிக்கர்களைக் கலந்து கொண்டதாக வேறு கூறுகிருர்.

உண்மை நிலையென்னவோ இதுதான். தென்மேற்கு ஆப்பிரிக்காவின் பெருவாரியான மக்கள், ஆப்பிரிக்கர்களுக்கு, வாக்குரிமையேயில்லை என்பதுடன், ஒரு சிலரிடம்தான் "நீங்கள் உங்களுக்குத் தெரிந்தவர்களால் ஆளப்படவேண்டுமா, அல்லது ஊர் பெயர் தெரியாத வெளிநாட்டினரால் ஆளப்படவேண்டுமோ?" என்ற கேள்வியையும் கேட்டிருக்கிருர்கள், மலான் அரசாங்கத்தார்.

தென்மேற்கு ஆப்பிரிக்காவை ஒருவாறு கபளீகரம் செய்ததோடு நில்லாமல் பெருவானுலண்ட், ஸ்வேசி லண்ட், பாசுடோ லண்ட் என்ற பக்கத்துப் பிராந்தியங்களிலும் தங்கள் பேராசைமிக்க கவனத்தைச் செலுத்திவிருக்கிருர் டாக்டர் மலான். தென்னுப்பிரிக்காவின் தற்காப்புக்கு இந்தப் பிராந்தியங்கள் மிகவும்முக்கியமானவை என்று பசப்புகிருர் தென்னுப்பிரிக்க யூனியன் தற்காப்பு மந்திரி.

இந்த இக்கட்டான நிலையில் ஐக்கிய நாடுகள் காரியாலயம் மைகேல் ஸ்காட் என்பவரது வாக்கைக்கேட்க முடியாதென்று மறுத்திருப்பது நிலையை இன்னும் கோரமாக்குகிறது. மைகேல் ஸ்காட் தென்மேற்கு ஆப்பிரிக்காவில் வதியும் ஆப்பிரிக்கர்களது நிலையைத் தெளிவாக உணர்ந்தவர். அந்தப் பிராந்தியங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து அந்தமக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டவர்.

திரு. மைகேல் ஸ்காட் கடைசியில் தென்மேற்கு ஆப்பிரிக்க பிரச்னை சர்வதேச நீதிசபையின் முன்னுல் கொண்டுவரப்பட வேண்டுமென்று கோரியிருக்கிருர். இந்தக் கோரிக்கையின் மூலம்தான் கடைசியாக தென் மேற்கு ஆப்பிரிக்காவுக்கு ஏதாவது நீதி கிடைக்க முடியும் என்று கருதுகிருர்.

மலானின் கூற்று எந்த இடத்தில் போய் முடியும் என்று கூறுவதற்கில்லை. மலானிஸத்தின் விபரீதப் போக்கைத் தடைசெய்யத் தக்க உத்வேகம் இன்னும் ஐக்கிய நாடுகள் சபைக்குத் தோன்ருமலிருப்பது கண்டு நாம் வியப்புத்தான் அடைகிறேரும்.

காஷ்மீரப் பிரச்னை

காஷ்மீர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பிறகு தற்போது கமிஷனின் நேரடியான மேற்பார்வையின் கீழ் மேற்கொண்டு காரியங்கள் நடைபெற்று வருகின்றன. இதற்கிடையில் இந்தியா ஒரு குற்றச்சாட்டை கமிஷனின் முன்பாக எடுத்துச் செல்கிறதெனத் தெரிய வருகிறது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி இரு தரப்பிலும் படைகளை நிறுத்தி வைப்பதற்கான இடங்கள் தெளிவாக வற்புறுத்தப்பட்டிருந்தன. இந்திய அரசாங்கம் இந்த ஒப்பந்தத்தை ஜாக்கிரதையாக நிறைவேற்றி வைக்கத் தக்க காரியங்கள் செய்து வந்திருக்கிறது.

ஆனல் பாகிஸ்தான் இதற்கு நேர் விரோதமாகத் தன் படைகளை யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு விரோதமாகப் பல பிராந்தியங்களில் படர விட்டிருப்பதுடன், முக்கியமான பல ஸ்தலங்களை ஆக்கிரமித்துக் கொண்டும் இருக்கிறது.

ஆகஸ்ட் 13-ம் தேதிய தீர்மானத்தின்படி பார்க்கப்போனுல் பாகிஸ்தான் தன் படைகளை காஷ்மீர் அரங்கத்திலிருந்தே வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும். ஆனல் இதற்கு நேர் விரோதமாக காஷ்மீரில், கமிஷனின் தீர்ப்புக்கும் விரோதமாக, படைகளை முன்னணிப் பிராந்தியங்களில் நிறுத்தி வைத்திருக்கிறது என்று தெரியவருகிறது.

காஷ்மீர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இந்த முறையில் மீறுவதென்பது தவருன செயல் என்பதுடன், இந்தச் செயல் சமாதானத்துக்கு முரணுன மனப்பான்மையைத் தான் எடுத்துக்காட்டுகிறது என்றும் கூறவேண்டியதில்லை.

திருவாங்கூர்

திருவாங்கூர் தமிழ் பிராந்தியங்களை உடனடியாக சென்னை மாகாணத்துடன் சேர்த்துவிட வேண்டும் என்று சத்தியாக்கிரகம் செய்த திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. நதேனியல் கைது செய்யப்பட்டிருப்பது நிலைமையை மோசமாக்கிவிடுமோ என்று பயப்பட வேண்டியிருக்கிறது. திரு. நதேனியலின் சத்தியாக்கிரகம் ஒத்திப் போடப்பட்டிருக்கலாமெனினும் இவ்வாறு அவரைக் கைது செய்வது சுமுகமான நிலைக்கு பங்கம் விளைக்குமோ என்று அச்சுற வேண்டியிருக்கிறது.

திரு. நதேனியல் நீண்டகாலமாக திருவாங்கூர் தமிழ்பிராந்தியங்களை சென்னை மாகாணத்துடன் சேர்த்துவிட வேண்டுமென்று கோரி வருவது நேயர்களுக்குத் தெரியும். மொழிவாரிப் பிரிவினை தற்போதைய நிலையில் ஒத்திப் போடப்பட்டிருப்பினும், இது நீண்ட காலத்துக்கு பிரச்னையைத் தள்ளிப் போடுவதாக ஆகிவிடக்கூடாதே என்ற கவலை நமக்கும் உண்டு. திருவாங்கூர், கொச்சி இணைப்பு சமஸ்தான ரீதியாக ஏற்படவிருக்கும் தருணத்தில் திரு. நதேனியலின் சத்யாக்கிரகம் மொழிவாரிப் பிரிவினை விஷயத்தை முன்னணியில் கொண்டு வந்து நிறுத்துகிறது.

திரு. நதேனியல் சத்தியாக்கிரகத்தை சிறிது காலத்துக்கு ஒத்திப் போடுவது நலம் என்பதை அவருக்கும், மொழிவாரிப் பிரிவினை விஷயம் உடனடியாக கவனிக்கப் பட வேண்டுமென்ற விஷயத்தை மத்திய அரசாங்கத்துக்கும் எடுத்துக் கூற விரும்புகிறேரும்.

✷

திரு. ஸ்ரீனிவாச அய்யர்

திருச்சி வக்கீல்கள் சங்கத்தில் முன்னணியில் நின்ற திரு. ஆர். ஸ்ரீனிவாசய்யரவர்கள் சமீபத்தில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் மறைந்தது குறித்து வருந்துகிறேரும். திரு. ஸ்ரீனிவாசய்யர் நாற்பத்திமூன்று ஆண்டுகள் வக்கீலாகத் தொழில் செய்தவர். முன்பு திருச்சி வக்கீல்கள் சங்கத்துக்குத் தலைவராயிருந்திருக்கிருர். வெகுகாலம் திருச்சி தேசீயக் கல்லூரி கமிட்டியில் காரியதரிசி வேலை பார்த்திருக்கிருர். திருச்சி அத்வைத சபையில அன்னுர் பங்கு கொண்டிருந்திருப்பதுடன், ஹிந்து மதத்தில் அளவற்ற நம்பிக்கையும், தர்மத்தைப் பரப்புவதில் அக்கரையும் காட்டியிருக்கிருர். அன்னுரது பிரிவால் வருந்தும் அனைவருக்கும் நமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேரும்.

✷

கிடைக்கப்பெற்றேரும் :

இன்ப புரி :

பிரசுரம் தி. மா. இராமலிங்கம், நெ. 12—B, காவல்கார தெரு, தென்னுர், திருச்சி. விலை அணு 3.

திருச்சி நகரசபை திரு. ஈ. வே. ராமசாமிப் பெரியாருக்கு வரவேற்பு அளித்த காலையில் ஈ. வே. ரா. அவர்கள் செய்த பிரசங்கத்தைத் தொகுத்து வெளியிட்டிருக்கிருர் திரு. இராமலிங்கம். "நகரசபைக்குக் கட்சி வேண்டியதில்லை" என்றும், "நகரசபையைப் பொருத்த மட்டில் வரி பெருமலே ஆட்சி செய்வது சாத்தியமானதுதான்" என்றும் கூறுகிருர் திரு. ஈ. வே. ரா. இப்பிரசங்கத்தில். திராவிட கழகத்தினர் மாத்திரமின்றி, மற்றைய மக்களும் படித்துச் சுவைக்கத்தக்க நூல் இது என்பதைச் சொல்ல விரும்புகிறேரும்.

அன்னையும் சேயும்

பத்து நீண்ட வருடங்களாகத் தவமிருந்து கடைசியாக அடைந்த குழந்தையை வேண்டாமென்று கூறியதாக ஒரு அன்னை பற்றிய சேதி கிழக்கு வங்காளத்திலிருந்து வருகிறது. காரணம் தான் ஒரு குழந்தை பெற்ருல் உடனே அதை பிரம்மபுத்ரா நதிக்குக் கொடுப்பதாக அவள் சபதம் செய்திருந்தாளாம்.

கள்ளிப்பட்டியும் வெள்ளி நிலாவும்

"கள்ளிப்பட்டியும், வெள்ளி நிலாவும்" என்ற தலைப்பில் சென்ற வாரம் ஆரம்பித்த தொடர் கட்டுரையின் அடுத்த பகுதி அடுத்த வாரம் வெளியாகுமென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேரும்.

விமர்சனம்

ஜமீந்தாரி பிரச்னை:

கே. வி. முருகன் எழுதியது. புதுமை பிரசுரம், 28 டவுன் ஹால்ரோடு, மதுரை. விலை அணா ஆறு.

'ஜமீந்தாரி பிரச்னை' இப்போது நமது மாகாணத்தின் முக்கிய பிரச்னையாக இருந்து வருகிறது. ஜமீன் ஒழிப்பு மசோதா சட்டமான பின்னரும் சில சிக்கல்களின் காரணமாகவும், நஷ்டஈடு கொடுக்கப் பணமுடை காரணமாகவும் அது கொண்டு செலுத்தப்படாமல் இருந்து வருகிறது.

ஜமீந்தாரி ஒழிப்பு வேலையில் பிரகாசம் காருவுக்குப் பின்னர் கனம் காளா வெங்கட்ராவ் ஈடுபட்ட காலத்தில் மதுரைவைத்யநாதய்யர்போன்ற ஒரு சில அறிஞர்களால் முன் கொண்டுவரப்பட்ட பலவித கேள்விகள் பிரச்னையின் இன்றைய நிலையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. போதுமான கணக்கு வழக்குகளின்றி, பாதிக்கப்படும் வர்க்கத்தாரின் உண்மையான நிலையைப் பரிசீலனை செய்யாமல் அவசரப்பட்டுச் செய்த காரியங்களின் 'உன்னதமான' எடுத்துக் காட்டு நம் ஜமீந்தாரி மசோதா.

'ஜமீந்தாரி பிரச்னை' என்ற இந்தப் புத்தகம் இந்த சச்சரவுக்கிடமான விஷயங்களைப் பற்றிப் பரிசீலனை செய்யவில்லை. உணர்ச்சி வசப்பட்ட தமிழில் ஜமீந்தாரியினால் ஏற்பட்டிருந்த கஷ்டங்களைச் சித்தரித்துக்காட்டி அவற்றின் ஒழிப்பினால் செய்யப்பட்டதாகக் கருதப்படும்நன்மைகளைப் படரவிட்டுக் காட்டுவதில் திரு. முருகன் அடைந்திருக்கும் வெற்றி அற்புதமானது!

ஒரு சில எழுத்துப்பிழைகளும் அச்சுத் தவறுகளும் தவிர புத்தகம் அழகாக அமைந்திருக்கிறது. ஜமீந்தாரியினால் ஏற்பட்டிருந்த கஷ்டங்களை இது காறும் அனுபவித்த மக்களுக்கு இந்தப் புத்தகத்தை சிபாரிசு செய்கிறோம்.

காதலனும் காதலியும்:

ஆசிரியர் "கலைதாசன்" கலைப் பதிப்பகம், நெல்லை, விலை அணா 12.

"காதலால் தானே" என்ற முகப்புப் பாடலுடனும், "கலைதாசன்"து புகைப்படத்துடனும் ஆரம்பிக்கும் இப்புத்தகத்தின் லட்சியம் என்னவென்று தெரியவில்லை. காதலனுக்கும், காதலிக்கும் கற்பனையான பல சம்பாஷணைகள் நடத்துவதில் ஆசிரியருக்கு இருக்கும் ஆர்வம் அமிதமானது. இந்த சம்பாஷணைகளில் "கேள்க்கிறோம்"போன்ற சொற்றொடர்கள் நிறைய இருக்கின்றன.

"அசோகமாலா", "சோழ மங்கை", "காஞ்சனை" என்ற "வர்ணனைகள்" எதற்காக இடையே செருகப்பட்டிருக்கின்றன என்று புரியவில்லை.

"உதிரச் சின்னம்" என்ற பத்தாவது வர்ணனை பாராட்டுக்குரியது. காரணம் அது எப்படியோ நமக்கு பர்னார்ட்ஷாவின் 'Revolutionists' Handbook' என்ற புத்தகத்தையும் அத்துடன் பிரசுரமான அற்புத நாடகத்தையும் ஞாபகப்படுத்துகிறது என்பதுதான்!

அண்ணல் அமரரான ஆண்டு நிறைவுநாள்:

கும்பகோணம், பெரியதெரு, ஸ்ரீராமா ஆரம்ப பாடசாலையினர் தாங்கள் 12—2—48-ல் வெளியிட்ட உறுதிமொழிப் பத்திரத்தைக் கண்ணுற்றுப் பாராட்டிய பெரியோர்களது ஆசிமொழிகளை ஒரு இனிய புத்தகத்தில் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அட்டையைத் திறந்தவுடன் "மகாத்மாவும், பரமாத்மாவும்" என்ற அழகிய சித்திரமும், அதையடுத்து மகாத்மாவின் வாழ்க்கைச் சரிதமும் கொடுபட்டிருக்கின்றன.

தமிழரசு:

வாரவெளியீடு, திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் போராட்டமலர், விலை அணா 2. கிடைக்குமிடம் "தமிழரசு" அலுவலகம், நாகர்கோவில்.

*

ஹிந்தி விழா

சென்ற 11—4—49 திங்கட்கிழமையன்று மாலை 6-மணிக்கு ஷை விழா திருச்சி தேசியக் கல்லூரி சரஸ்வதி ஹாலில் நடைபெற்றது. அவ்வமயம் தென்னிந்திய ரெயில்வே ஜெனரல் மானேஜர் ஸ்ரீ கே. துரை அவர்கள் தலைமை வகித்து ஹிந்தி பரீட்சைகளில தேரிய மாணவ மாணவிகளுக்கு அத்தாட்சிப் பத்திரங்களும் ஷை பரீட்சைகளில் முதலாவது இரண்டாவதாக வந்தவர்களுக்குப் பரிசுகளும் வழங்கினார். ஸ்ரீ ஏ ராமய்யர் அவர்கள் எல்லோரையும் வரவேற்று நகர ஹிந்தி பிரசார வேலையைப் பற்றிய அறிக்கையையும் வாசித்தார். ஸ்ரீ அவத்நந்தன் வந்தனங்கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

கதம்பம்

மதனப்பள்ளி மஹில சமாஜத்தின் சார்பில் நடந்த பொதுக் கூட்டத்தில் நிறைவேறிய ஒரு தீர்மானம் கவனிக்கத்தக்கது. சென்னை அரசாங்கத்திற்கும், கவர்னருக்கும் அந்த மஹில சமாஜக் கூட்டம் அனுப்பி வைத்திருக்கும் தீர்மானத்தில் ஒரு ஸ்த்ரீயையும் சென்னை மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது.

இந்தக் கோரிக்கைக்கு அரசாங்கம் ஏதாவது கவனம் செலுத்துமா என்பது தெரியவில்லை. அது எப்படியிருந்தபோதிலும் சென்னை மஹில சமாஜம் தன் கடனைச் செவ்வனே செய்து விட்டது!

சமாஜம் இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பத் "துணிந்த" காரணம் மந்திரி சபை இன்னும் விஸ்தரிக்கப்படலாம் என்ற நம்பிக்கையேயாகும். இந்த விஸ்தரிப்பில் ஒரு ஸ்த்ரீயும் அங்கம் வகிக்க வேண்டும் என்ற "ஆசை" தான் சமாஜத்தினருக்கு இருந்திருக்கிறதென்று எண்ணுகிறோம்.

மதனப்பள்ளி சமாஜத்தினரின் மனமார்ந்த நம்பிக்கைக்கு அரசாங்கம் ஒரு புன்முறுவலாவது பூக்கும் என்றே நமக்குத் தோன்றுகிறது. எனினும் காரியத்தில் சமாஜம் கோரும் விஷயம் நடக்கும் என்ற நம்பிக்கை நமக்கில்லை.

ஸ்த்ரீ ஒருத்தியை மந்திரி சபையில் ஏன் சேர்க்கக்கூடாது என்பதற்கு நம்மால் காரணம் காட்டமுடியாதெனினும், ஏன் சேர்க்க வேண்டும் என்பதற்குக் காரணம் நமக்குத் தெரியவில்லை. மஹில சமாஜத் தீர்மானம் என்ன ஆகிறது என்றுதான் பார்ப்போமே!

ஃ ஃ ஃ

"இனாகுலேஷன்", "வாக்ஸினேஷன்" சம்பந்தமாக இப்போது 'ஹிந்து' பத்திரிகையில் நடந்துவரும் ரஸமான விவாதம் கவனிக்கத்தக்கது.

"பெண்ட்ரகான்" என்ற புனை பெயரில் ஒருவர் மார்ச் 31-உ 'ஹிந்து' இதழில் லண்டனைச் சேர்ந்த பிரிட்டிஷ் "வைவிஸெக்ஷன்" எதிர்ப்பு இயக்கக் காரியதரிசியைத் தாக்கியிருக்கிறார். இப்படித் தாக்குதலுக்குள்ளானவர் பெயர் டில்டெஸ்லி என்பது.

டில்டெஸ்லி சென்ற வெள்ளிக்கிழமையன்று 'ஹிந்து'வில் "பெண்ட்ரகானு"க்கு விடுத்திருக்கும் பதில் ருசிகரமாக இருப்பதுடன் பல உண்மைகளைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

"என் அன்னை வாக்ஸினேஷனை எதிர்த்தாள்; காரணம் அவள் அதில் தவறு இருப்பதாக உள்ளூற உணர்ந்தாள். நான் அதை எதிர்க்கிறேன்; காரணம் அது தவறென்று எனக்குத் தெரியும்" என்று கூறுகிறார் டில்டெஸ்லி,

டாக்டர் கிரெய்டன் என்ற பிரபலவிஞ்ஞானியின் வாழ்க்கை குறித்து டில்டெஸ்லி மேற்கண்ட கடிதத்தில் கூறியிருக்கும் விஷயங்கள் நம்மை உணர்ச்சிக்குள்ளாக்கத்தக்கவை. கிரெய்டன் அவர்களை அம்மை குத்துதல் சம்மந்தமாக பிரிட்டிஷ் "என்சைக்லோபாடியா"வுக்குக் கட்டுரை எழுதுமாறு கோரப்பட்டது. அவர் ஆரம்பத்தில் அம்மை குத்துதலுக்கு உகப்பான கருத்து வைத்திருந்தார். ஆனால் அது குறித்து மேலும் ஆராய்ச்சி நடத்திய காலத்தில் அவர் அம்மை குத்துதலுக்கு எதிரியானார். இதன் காரணமாக அவர் ஏச்சுக்கும், இதன் மூலம் வாழ்க்கையில் மகத்தான தோல்விக்கும் ஆளானார்.

நம் நாட்டில் அம்மை குத்துதல், "இனாகுலேஷன்" சம்மந்தமாக இருந்துவரும் கருத்துகள் பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கருத்துக்களைவிடக் கேவலமாயிருக்கின்றன. எனவேதான் டில்டெஸ்லி போன்றாரது முற்போக்கான கருத்துகள் நமக்குப் புதியனவாயும், "பயங்கரமாயும்" தோன்றுகின்றன.

கடிதத்தின் கடைசிப் பகுதியில் திரு. டில்டெஸ்லி கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது. போதுமான சாட்சியம் ஏதுமில்லாமல் நவீன கால மருந்துகளை "ரொம்ப நல்லவை" என்று ஒப்புக்கொள்ளும் "நம்பிக்கை" நம்பவரைப் பிடித்து வரும் அதிசயத்தைக் கண்டு டில்டெஸ்லி தமது வியப்புகளைத் தெரிவித்துக்கொள்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

நம் நாட்டில் தற்போது பி. ஸி. ஜி. என்ற அம்மைகுத்துதல் இப்போது ரொம்பப் பிரபலமாக இருந்துவருகிறது. இது குறித்து நமது கருத்துகளை நாம் ஏற்கனவேயே தெரிவித்திருக்கிறோம். பி. ஸி. ஜி. போன்ற "மாய" அம்மைகளினால் ஏது பலனும் ஏற்படாதென்றும், சமூகத்தின் அடிப்படையில் மாற்றங்கள் செய்து எல்லோருக்கும் சௌகரியமாக வாழ வழி செய்தாலன்றி பிரயோசனம் ஏதுமில்லையென்றும் நாம் பன்முறை தெரிவித்திருக்கிறோம்.

எப்படியோ; இது பி. ஸி. ஜி. காலம்; டில்டெஸ்லி காலமல்ல; இப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது.

இந்தக்கடிதம் அரசாங்கத்தின் கவனத்துக்கு ஆளாகியிருக்குமென்று எண்ணுகிறோம். அரசாங்கத்தின் எதிரொலி எவ்வாறிருக்கிறது என்பது ரஸனைக்குரிய விஷயமல்லவா!

ஃ ஃ ஃ

நமது மாகாண மந்திரிசபை நிலைமை ஒருவாறிருக்க விந்திய பிரதேச யூனியன் சம்பந்தமான சேதி இன்னும் விநோதமாக இருக்கிறது. விந்தியப் பிரதேச பிரதமர் திரு. அவதேச பிரதாப் சிம்மரின் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால் இப்படிக் கொண்டு வந்த சபை சட்டசபையல்ல. விந்திய பிரதேச காங்கிரஸ் கமிட்டி.

இதுவிஷயம் நமது ராஷ்டிரபதி பட்டாபி சீதாராமையாவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டபோது அவர் கூறிய பதில் குறிப்பிடத்தக்கது. விந்திய பிரதேசத்தில் கொண்டு வரப்பட்ட இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் காங்கிரஸ் கமிட்டியினால் கொண்டு வரப்பட்டதால் கவனத்துக்கு உரியதல்ல என்று கூறியுள்ளார் திரு. பட்டாபி.

இதற்கிடையில் ராவ்சிவ் பகதூர்சிங் என்ற விந்திய பிரதேச தொழில் மந்திரி ஏதோ லஞ்சம் வாங்கியதாகக் கைது செய்யப்பட்டு, பின்னர் ஜாமீனில் விடப்பட்டார். இந்த மந்திரி தமது பதவியை ராஜிநாமா செய்து விட்டாராம்.

விந்திய பிரதேசத்தில் தற்போதுள்ள மந்திரிசபை உண்மையாகவே மக்களின் மந்திரிசபையா அல்லவா என்பதுதான் கேள்வியே தவிர, சட்டப்படி, கொண்டுவரப்பட்ட தீர்மானம் சரியா தவறா என்பதல்ல. இது விஷயத்தை டாக்டர் பட்டாபி கவனிப்பார் என்றே நினைக்கிறோம்.

காங்கிரசின் பெயர் இவ்வாறு பல பிராந்தியங்களிலும் மாசுபடுத்தப்படுவது குறித்து நமக்கு வருத்தமாக இருக்கிறது. தேர்தல் காலத்தில் இத்தகைய போராட்டங்களால் நெருக்குறுவதற்கு பதிலாக, முன்னமேயே இதுபோன்ற விஷயங்களை கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று டாக்டர் பட்டாபியை வேண்டிக் கொள்கிறோம்.

விந்திய பிரதேச மந்திரிசபை குறித்து எழுந்திருக்கும் இந்தப் பிரச்னை சர்வ இந்திய கவனத்துக்கு உள்ளாகுமென்றே நம்புகிறோம்.

குளித்தலை டி. மு. கோர்ட்
O. S. 314/34

முத்துகிருஷ்ண கங்காணி – வாதி
2. அறப்பனி மூப்பன்,
4. வேம்படி மூப்பன்,
5. தேக்கன் மூப்பன்,
6. சங்கபிள்ளை மூப்பன்,
7. காளியம்மாள்,
— 2, 4, 5, 6, 7, பிரதிவாதிகள்

ஷை பிரதிவாதிகள் பேரில் ஈட்டுச் சொத்துக்களை, ஏலம் போடவும் ஏலத்தில் வாதிக்காக வாதி காரியஸ்தர் ஏலம் கேட்டு டிக்கிரிக்கு உழவடை செய்து கொள்ளவும் வாதி மனுக் கொடுத்த ஷை மனு 4—6—49 தேதி உத்திரவுக்கு வருவதால் ஆக்ஷேபணையுள்ளவர்கள் கோர்ட்டில் தெரிவித்துக்கொள்ளக் கோரப்படுகிறது.

குளித்தலை 12–4–49 } K. சுந்தரேசய்யர். வாதி வக்கீல்

குளித்தலை டி. மு. கோர்ட்
O. S. 532/47

அப்பாதுரை பிள்ளை — வாதி.

பினுங்கிலிருக்கும் ரெங்கசாமி மண்டூர் — 5-ம் பிரதிவாதி.

ஷை 5-ம் பிரதிவாதிக்கு அறிவிப்பதாவது—

உம் வகையறு பேரில் வாதி நிலஸ்வாதீனம் பாக பிரிவினை வகையறு கிடைக்க தாவா செய்து 18—4—49உ வாய்தா ஏற்பட்டிருக்கிறது. அன்று நீர் ஆஜராகாவிடில் எக்ஸ் பார்ட்டி தீர்ப்பாகிவிடும் என்பதை அறியவும்.

K. திருவேங்கடாச்சாரியார்.
வாதி வக்கீல்

குளித்தலை 6—4—49

துறையூர் டி. மு. கோர்ட்
O. P. No. 9/49

மனுதார்கள் :– செல்லம்மாள் வகையறு.

12—11—45உ ரெங்கசாமி கோனாரால் அருந்தவம்மாளுக்கு ரூ. 600/- க்கு எழுதிக் கொடுத்திருந்த புரோ நோட்டின் அசல் வட்டி தொகைகளை வசூல் செய்ய இப்பால் இறந்த ஷை அருந்தவம்மாள் வார்சுதார்களாகிய மனுதார்களுக்கு வார்சு சர்ட்டிபிகேட்டு கிடைக்க மனு கொடுத்து 21–4–49ந் தேதி ஈரங்கி போடப்பட்டிருப்பதால் ஆக்ஷேபணையுள்ளவர்கள் ஷை தேதியில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ளலாம்.

P. ரங்கசாமி ரெட்டியார்.
மனுதார்கள் அட்வகேட்

தி பீர்தான் ஜுஹார்மல் பாங்க் லிமிடெட்

பீர்தான் பில்டிங்ஸ் -:- திருச்சிராப்பள்ளி.

பிக்சட் டிபாசிட்கள் குறுகிய நீண்ட காலத் தவணைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் டிபாசிட்டுகளும் போடலாம். வட்டி விபரங்கள் நேரில் அல்லது தபால் மூலம் தலைமை பாங்கியிலோ கிளைகளிலோ தெரிந்துகொள்ளலாம்.

தங்கம், வெள்ளி நகைகளின்மீது சகாய வட்டிக்கு கடன் தரப்படும்.

J. ஹீராம்சந்த் சேட்.
மானேஜிங் டைரக்டர்.

பணக்காரத் தன்மை

டர்பன் திரு. ச. மு. பிள்ளை

பணக்காரத் தன்மையை சரிவர ஆராய்ந்தால் அது ஒருவனுடைய சக்தியை விர்த்திக்கச் செய்கிறது என்றும், ஏழ்மை ஒருவனுடைய சக்தியைக் குன்றவைத்து கீழ்மைக் கிழுத்துச் செல்கிறது என்றும் புலப்படும். நாம் இன்று பணக்காரத் தன்மையை குலேக்க—ஒழிக்க நினைக்கிறோம் என்றால், அவ் வொழிப்பின் மூலம் மானிட வர்க்கம் முழுவதையுமே வித்யாசம் இல்லாத செழித்த பணக்கார வர்க்கமாக்கக் கருதியேயன்றி ஏழ்மைக்கும் அதனால் இன்றியமையாத கீழ்மைக்கும் இழுத்துச் செல்லும் நோக்கத்தோடு அன்று. ஒரு சிலரே பணக்காரராய் இருந்து ஒரு சிலரே சக்திவாய்ந்தவராய் இருப்பதிலும், யாவருமே பணக்காரராகி யாவருமே சக்தி வாய்ந்தவரானால் மனித வர்க்கமே சக்தி வாய்ந்ததாகிறது. இன்று பணக்காரரின் சக்தி—நன்மையை செய்வதிலும் தீமையையே பெரிதும் செய்ய முற்படுவதற்கும், பணக்கார வர்க்கத்தினால் விரையங்களும் ஏற்படுவதற்கும் காரணம் பணக்காரன் ஏழை என்ற பாகுபாடுதான்.

ஜனநாயகத் தத்துவம் (Democracy) இன்று உலகில் பொய்த்து வருவதின் காரணம், அத் தத்துவம் இன்று பணக்காரரால் விலேக்கு வாங்கப்படக் கூடியதாயும், ஆட்சியானது பணக்காரரின் செல்வாக்கினால் குலேக்கப்பட்டு தாழ்த்தப் படுகிறதினாலுமே. மற்றும் மானிட வர்க்கத்தின் அறிவையும் முயற்சியையும் அன்பின் பெருக்கையும் தியாகத்தையும் கூட விலேக்கு வாங்கி அதனால் ஏற்படும் நன்மையை தானே அடைந்து ஏப்பம் விட்டு பணக்காரத் தன்மை ஏளனம் செய்கின்றது. ஜனப் பிரதிநிதிகளேயும் ஆட்சியையும் விலேக்கு வாங்குவதல்லாமல், இப் பணக்காரத் தன்மை தானே பிரதிநிதியாகவும் ஆட்சி செலுத்துவோராயும் பிரதிபலிக்க சாதனங்கள் பல உண்டு.

பிறப்பின் மூலம் அல்லது தனிப்பட்ட பட்டங்களின் மூலம் இப் பணக்கார வர்க்கம் தனிப் பிரிவாய் பிரிக்க முடியாததாய் இருந்தாலும், அம் மாதிரி பிரிவு உண்டு என்பது நிச்சயம். இவர்கள் மகாநாடுகள் கூடி தீர்மானங்கள் நிறைவேற்றுவிட்டாலும் சில தீர்மானங்களேயும் கொள்கைகளேயும் உடையதாய் இருந்து சில நிகழ்ச்சி முறைகளே கையாண்டுவருகிறார்கள். ஒரு பணக்காரன் மற்ற பணக்காரனே புகழ்வதின் மூலம், ஒருவரை ஒருவர் உயர்த்திக்கொள்வதன் மூலம் இவ் வர்க்கம் பிளவு படுத்திக் கொள்கிறது. இவ் வர்க்கத்தின் க்ஷேமம் அதிகரிக்க வேண்டுமானால் இக் கூட்டம் எண்ணிக்கையில் அதிகரிக்காமல் நாளுக்கு நாள் குறைவுபடவேண்டும். ஆகவே இக் கூட்டம் மற்றோரை உதாசினம் செய்யத் தலேப்படுகிறது. ஒன்றுக்கும் உதவாத பொம்மையைப் போன்ற நடை பிணமாய் இருப்பவனும்கூட மேலான உடை அணிந்து சாதாரண ஜனங்கள் என்போருடன் சேர்ந்து பழகாமல், பணக்காரர் என்ற பட்டமுடையோருடன் மாத்திரம் கலந்திருக்கும் தன்மையால் தம்மை உயர்த்திக் கொள்ள சாத்தியமாகிறது. இக் கூட்டம் ஜாதிமதப் பிரிவினையை ஓரளவு தாண்டியதாய் உள்ளது. சூழ்ச்சியில் சிறந்தவன் ஜாதிமத வித்யாசத்தை துறந்தவனாய் இல்லாவிட்டாலும் பணக்காரன என்போனுக்கு மாத்திரம் மதிப்புக் கொடுத்து வேறு ஜாதி பணக்காரனுக்கும் சலுகை காட்டி, தன் கட்சியில் இழுத்து ஒரு கொள்கையுமற்ற தன்னே வலுப்படுத்திக்கொள்ள முற்படுகிறான். சுயநலத்திற்காக ஒவ்வோர் கட்சியில் சேர்ந்து ஒவ்வோர் கொள்கையை அனுசரிப்பதாய் பாசாங்கு செய்கிறான்.

ஜனநாயகத் தத்துவம் தாண்டவமாடும் இடத்தில்கூட, அந்தஸ்து, அதிகாரம், செல்வாக்கு ஆகியவை சிறிய பணக்கார கூட்டத்தையே அடைகிறது. நியாய ஸ்தலங்களும், போலீஸ் இலாகாவும் கலாசாலேகளும் இக் கூட்டத்திற்கே பெரிதும் பயன்படுகின்றன. இக் கூட்டம் நாளுக்கு நாள் சிறுத்து இவ்வுலகமே இச் சிறு கூட்டத்திற்கு இருப்பதாகவும் முடிகிறது.

மனிதனது அறிவும் ஆற்றலும் பணக்காரன் கையில் அடங்கிவிடுவதாலோ அவ்வறிவிற்கும் ஆற்றலிற்கும் மதிப்புக் கொடுக்கும் நோக்கத்தோடு ஏழை மகனும்கூட பணக்காரவர்க்கத்தை மேன்மை பொருந்தியதாகப் பாவித்து தங்களேக் கீழ்மைப் படுத்திக் கொண்டுள்ளான். முடிவில் பணக்காரரே சகலத்திற்கும் தகுதியுடையவரென்றும், ஏழை என்றால் (அடிமைத் தொழில் செய்வதைத் தவிர) ஒன்றுக்கும் உதவாதவரென்றும் உலக மனப்போக்காக ஏற்படுகிறது. குட்டுப்பட்டாலும் மோதிரக்கையில் குட்டுப்பட வேண்டுமென்ற ஆவல் ஏற்படுகிறது.

இன்றைய ஏழை மக்களுக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்குமாயின், அது பணக்கார வர்க்கத்திலுள்ளோரிடையே ஒருவருக்கொருவர் போட்டியின் நிமித்தம் தன்னே மகிழ்ச்சி செய்துகொள்ள எண்ணி ஏழைகளுக்கு சிற்சில நன்மைகள் செய்திருக்கிறார்களேயன்றி வேறல்ல.

இப் பணக்காரக் கூட்டம் தனது அடிப்படையான கொள்கையை விடுவதில்லே. தனது பேச்சின் மூலம் அல்லது நடத்தையின் மூலம் அதனே மாற்றிக் கொளவதில்லே. சமத்துவத்தையும் கூட பேசும் ஏனென்றால் அதைப் பேசும் காலத்தில் பேசி தம்மை சர்வ சக்தராய் செய்து கொள்வதுதான் நோக்கமேயல்லாமல் சமத்துவ நோக்கமென்று வாஸ்தவத்தில் நிரூபிக்க முடியாது.

✱

தந்தி விலாசம் :—'கோகுல்'
போன் நெ. 57

Estd. 1909
Branch : MANNARGUDI

கும்பகோணம்
டி. எஸ். ஆர்.
கம்பெனியின்

சந்தனாதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம்,
அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல்
வத்தி தினுசுகள் இவைகளே உபயோகியுங்கள்.

கோகுல்
கூந்தல் தைலம்

☞ தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளேக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

எங்கள் ஆலிலே கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னே நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னே
கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

டோங்ரேயின்—
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்திபெற்ற டானிக்

சூதகத்தை நிறுத்தியது.
சுமரி (Tablets) சூதகக் கோளாறுகளே எந்த நிலேயிலும் நிறுத்த வல்லது. தீமை விளேவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது, ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலே ரு. 3 நாள்பட்ட கோளாறுகளுக்கு விலே ரு. 5 மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரு. 8 கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலே ரு. 4

(வி. பி. க்கு 12 அணு அதிகப்படி.)
Mrs. P. DEVEE, F.D.S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93, China Bazaar Rd. MADRAS

“பிரதாபசிங்! உன் வரவு நல் வரவாகுக. உன் நட்பு எனக்கு எங்கே எட்டாப்பழமாகப் போய்விடுமோ என ஏங்கியிருந்த எனக்கு உன் வரவு அளவில்லாத ஆனந்தத்தைத் தருகிறது. நாமிருவரும் நட்புரிமை ஏற்படுத்திக் கொள்ளுமுன் உனக்கு ஒருவார்த்தை. அக்பர் மண்மேல் கொண்டுள்ள ஆசையால் ராஜபுத்திர நாடுகளுடன் போர் தொடுக்கவில்லை. முகலாயர்களும் ராஜ புத்திரர்களும் ஒன்று சேர்ந்து இரு மதமும் ஒரே மதம் என்னும் மனப்பான்மை தங்களிடையே தோன்றவேண்டும் என்னும் ஆவல் தான் அவரை அங்ஙனம் செய்யத்தூண்டியது. இதே நோக்கத்துடன் தான் அக்பர் மான்சிங்கின் சகோதரி ஜோதாபாயை மணம் செய்துகொள்ள விரும்பியதும். இதை மான்சிங் நன்ருக உணர்ந்திருந்தார். அதனுல்தான் அவர் எத்தகைய தயக்கமும் செய்யாமல் ஜோதாபாயை எனக்கு மனமுவந்து அளித்தார். நீ இதை அறியாததால் என்னிடம் இத்தனை நாள் போர்புரிந்தாய். ஆனுல் இன்று நீயாகவே இங்கு வந்து சேர்ந்ததைப்பற்றி நான் பெரிதும் மகிழ்ச்சி யடைகிறேன். நம் நட்பு என்றும் நீங்காத நட்பாக வளர்பிறை போல வளர அல்லாவும், அன்னை பவானியும் உதவி புரியட்டும்” என்ருர் அக்பர்.

பிரதாப் முணு முணுத்தான். “இவன் முகலாயனுயிருந்தும் நான் திருப்தியடைவதற்காக அன்னை பவானியை சாட்சியாக அழைக்கிருன் கசடன். அக்பர்! உனக்கு அதிர்ஷ்ட தேவதை உதவி புரிகிருள். இல்லாவிடில் ராஜபுத்திரர்களிடையே தன்னலத் தியாக உணர்ச்சி மறைந்து போய் விட்டிருக்காது. இருக்கட்டும். எங்களுக்கும் ஒருகாலம் ஏற்படும். அப்போது ராஜபுத்திரர்கள் அடையும் வளர்ச்சியைக் கண்டு நீ திகைப்படைவாய். நினைவில்வைத்துக்கொள்” என்று கருவினுன் பிரதாப் சிங். தன் வெறுப்பை வெளிப்படுத்திக் கொள்ளாமல் தான் அமர்ந்திருந்த ஆசனத்திலிருந்தபடியே அக்பர் தர்பாரைச் சுற்றி ஒரு முறை பார்த்தான். மன்னன் அக்பர், மந்திரி தோடர்மல், மகன் ஸலீம், துரோகி மான்சிங். சட்டென்று அவன் பார்வை அணையிட்டுத் தடுக்கப்பட்ட வெள்ளத்து நீரைப்போல நின்றது. “மான்சிங் மட்டுமா துரோகி? நீயும்தான் துரோகி! போரில் உயிரிழந்து வீரசுவர்க்கம் செல்லாதது உன் முதல் துரோகம். மனைவியின் பாசத்தால் நாட்டை விட்டு ஓடி காட்டில் சரண்புகுந்தது உன் இரண்டாவது துரோகம். குழந்தைகள் பட்ட கஷ்டத்திற்காக

சிறு கதை

பிரதாப சிம்மன்

எஸ் பீ ஹர்ஷன்

மனம் தளர்ந்து அக்பருடன் சமாதானத்துக்கு ஓடி வந்தது மூன்ரும் துரோகம். கடைசியாக உனக்கு எள்ளளவும் தாழ்மையில்லாத மான்சிங்கை துரோகி என்று விளிப்பது உன் துரோகங்களுக்கெல்லாம் தலையாய துரோகம்” என்றது அவன் மனச்சாட்சி. அவன் திடுக்கிட்டான். “பவானி மாதா! என்னை சித்திரவதை செய்யாதே. உளுத்துப்போன மூங்கிலைப் போலாகி விட்ட என் உள்ளத்தைக் காட்டுத்தீ பற்றிக்கொள்ளும்படி செய்து விடாதே, ஜே பவானி” என்று ராஜபுத்திரர்களின் தெய்வம், துர்க்கையின் அம்சமான பவானியை வேண்டினுன்.

அக்பர் முகத்தில் புன்சிரிப்புத் தவழ்ந்தது. உள்ளக் குமுறலால் உணர்ச்சியிழந்து தன்னையறியாமல் ‘ஜே பவானி’ என்னும் வார்த்தைகளை பிரதாப்சிங் சற்று இரைந்து கூறி விட்டான். “பிரதாப், என்னை அந்நியனைப் போல் பாவிக்காதே. ராஜபுத்திரர்களின் தேசபக்தியை நான் நன்ருக உணர்ந்திருக்கிறேன். உன் உள்ளம் என் அன்பையும், நட்பையும் அறிந்து கொள்ளும் அளவுக்கு இன்னும் பக்குவமடையவில்லை. சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு நாளை இவ்விடத்தில் வந்துசேர்” என்ருர் அக்பர்.

பிரதாப்சிங் மறுமொழி கூருமல் தர்பாரை விட்டு வெளியே வந்தான். அவன் தன் விடுதியை அடையும் சமயம் அவனை நிறுத்தியது ஒரு சேவகன் அவன் கையில் ஒரு கடிதத்தைத் திணித்தான். “உங்களை சந்திக்க விரும்புகிறேன்—மான்சிங்” என்று எழுதப்பட்டிருந்த அக்கடிதத்தை படித்து முடித்தபின் கிழித்துக் காற்றிலே பறக்க விட்டான் பிரதாப்சிங்.

சித்தூர் ராணு பிரதாப சிம்மன், மொகலாய மன்னன் அக்பருக்குக் கீழ்ப்படிய மனமின்றி நாட்டைவிட்டு ஓடி மனைவி மக்களுடன் காட்டைச் சரண் புகுந்தான். வானுர ஓங்கி வளம்பெற வளர்ந்திருந்த நெடிய மரங்கள் இலைகளின் அசைவால் இன்னிசைக் கீதங்களை இசைத்துக் கொண்டிருந்தாலும், அந்த இசை கொந்தளித்துக் கொண்டிருந்த ராணு உள்ளத்தைக் கவரவில்லை. அதற்குப் பதிலாக அவன் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த புண்ணை புரையோடிய புண்ணுகச் செய்தது. வெற்றியையன்றி தோல்வி என்னும் வார்த்தையைத் தங்கள் அகராதியிலேயே வகுத்துக் கொள்ளாமல் இருந்த ராஜபுத்திரர்கள் மொகலாயப் படையிடம் தோல்விக்குமேல் தோல்வியை அடைந்ததை எண்ணி எண்ணி பிரதாபசிம்மன் ஏங்கிக்கொண்டிருந்தான். ராஜபுத்திரர்களிடம் தியாக உணர்ச்சி என்னும் மனப்பான்மையே அற்றுப்போய் விட்டதே என்று எண்ணி அவன் உள்ளம் கரைகாணுத் துயரக் கடலில் ஆழ்ந்தது. இதன் பிரதிபலிப்பே போன்று அவன் உள்ளத்தினின்றும் எழுந்த ஆழ்ந்த பெருமூச்சு காற்றிலே கலந்தது.

“ஹே பவானி! ராஜபுத்திரர்களை எதிரிகளிடம் காட்டிக் கொடுக்கத் துணிந்து விட்டாயே மாதா. உன் மக்கள் உனக்குச் செய்த துரோகம் தான் என்ன? பற்றி எரியும் மூங்கில் காட்டில் அகப்பட்டுத் தவிக்கும் அரவத்தைப்போல அவர்கள் தத்தளிக்கும்போது உன் மனம் ஏன் மாறவில்லை? பால் பொங்கி வழிவதைப்போலப் புகழ் பொங்கி வழிந்த எங்கள் மரபுக்கு அழியாத களங்கத்தை ஏற்படுத்துகின்ருயே. அக்பர், மொகலாயன், நீசன்—அவனிடம் நான் தலைகுனிந்து அவமானமடையும்படி செய்து விட்டாயே” என்றெல்லாம் புலம்பினுன்.

“நாட்டுக்கு ஒருவனே அன்றி ராஜபுத்திரக் குலத்துக்கு ஒருவனே ஏன் அக்பருக்குப் படியாமல் போர்புரிந்து வெற்றி காணக்கூடாது. ராஜ புத்திரக் குலத்துக்கு ஏற்படப்போகும் இவ்வவமானத்துக்கு, இப்பொறுக்க முடியாத களங்கத்துக்கு, நான் எதிரியாக இருந்தால் என்ன? ஆனுல் இன்று நான் போர்புரியாமல் நாட்டை விட்டு காட்டுக்கு ஓடி வந்துவிட்டேனே. நான் மன்னிக்கப்பட முடியாத பாபிதான். மனைவியிடமும், மக்களிடமும் இருக்கும் பாசம்தான் என்னை இங்ஙனம் ஓடிவரச் செய்தது. ஐயோ பவானி, அன்னையே, என்னை இப்பூமி வெடித்து விழுங்கட்டும். என்னுடன் என் மனைவி மக்கள் எல்லோரையும் விழுங்கி ஏப்பமிடட்டும்.”

ராணி துர்க்கா தேவி அதுவரை குழந்தைகளைக் கவனித்துக் கொண்டிருந்தவள் பிரதாப சிம்மனின் உளறல்களைக் கேட்டு அவனிருக்குமிடத்தை வந்தடைந்தாள். “துர்க்கா, போ போ போய்விடு. என் உறுதியைக் குலைத்து போர்க்களத்தை விட்டு ஓடிக்காட்டில் சரண்புகுவதற்கு காரணமாகிய நீ என் முன்னே நில்லாதே” என்று கத்தினுன் பிரதாப்.

ராணி துர்க்கா பிரதாப சிம்மனை நன்ருக அறிந்திருந்தாள். அவன் இத்தகைய நிம்மதியற்ற நிலையில் நெடு நேரம் இருப்பது அவன் உயிருக்கும் தனக்கும் நன்மை பயப்பதல்ல என்பதை உணர்ந்திருந்த அவள் அவன் நினைவுப்பொறிகளை வேறு வழியில் திருப்பப் பிரயத்தனப்பட்டாள். நெடு நேரம் வரையில் ராணி தன் முயற்சியில் வெற்றி பெறவேயில்லை.

இருளின் பயங்கரமான தோற்றத்திலும், கொடிய விலங்குகளின் கர்ஜனைகளிலும் ராணி துர்க்கா அமைதியையும், ஆனந்தத்தையும் பெறத்தான் செய்தாள். ஆனுல் தன் கணவனின்

(அடுத்த பக்கம் பார்க்க)

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய
குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனுல் டாக்டர்கள்
இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறர்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக் கண்டு ஏமாருதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதருஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

கலியாண காலங்களுக்குத் தேவையான எல்லாவிதமான பட்டு ஜவுளிகளுக்கும்

பாபு இண்டஸ்ட்ரீஸ்

பிராஞ்சு :— “பாபு ஹால்” சைனபஜார் ரோடு, திருச்சி.

Slate Manufacturers &
பட்டு ஜவுளி வியாபாரம்
டவுன் ஸ்டேஷன் ரோட்
திருச்சிராப்பள்ளி

ரேகை சாத்திரம்

முடிவுரை

“ சிவதாஸன் ”



இதுவரை எழுதிவந்த ரேகை சாத்திரத்தின் முடிவுரையை சமர்ப்பிக்கின்றேன்.

இதுவரை எவ்வளவோ ஆசிரியர்கள் ரேகை சாத்திரத்தைப் பற்றி எழுதியுள்ளனர். மற்ற புத்தகங்களை படித்தவர்கள் நாம் எழுதியிருப்பதில் பல புது அம்சங்களை பார்த்திருக்கலாம். இன்னும் இதில் தொடர்ந்து எழுதுவதற்கு பல விசேடங்கள் உள. இதை தொடர்ந்து பிறகு கவனிப்போம்.

நமது அபிப்பிராயத்தில், கிரகங்களின் வலிமையால் தான் வாழ்வும், தாழ்வும் ஏற்படுகிறது. ஆகையால் நவ கிரகங்களுக்கு கண்டிப்பாக தீபம் ஏற்றிவைத்தல், பூஜைகள் செய்தல், முதலியவைகளால் கண்டிப்பாக முன்னேற்றம் அடையலாம்.

முக்கியமாக சென்றவாரத்தில் எழுதியிருந்த, ரேகைகளின் படம் எடுக்கும் விதம் போன்ற பல புது விசேடங்களை எழுதியுள்ளோம். நிற்க, நாம் எழுதி வந்ததில் அபிப்பிராய பேதங்கள் கண்டால் எமக்கு எழுதும் படி வேண்டுகிறோம். மேலும், மேலும் ஆராய்ச்சியாளர்கள் வாதம் செய்து இந் நூலை பொன் நூலாக்கி ஆதாரமுடன் நமக்குப் பின் வரப்போகும் சந்ததிகளுக்கு அளிக்க வேண்டும் என்பதே கருத்து. இத்துறையில் மேலும் ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு சபை கூடி திட்டங்கள் வகுக்கவேண்டும். பொறுப்புள்ள உயர்ந்த பதவிகளை வகிப்போர்கள் தங்களின் கை ரேகை படங்களை நன்கொடையாக அளிக்கவேண்டும். இம்மாதிரி பல மகான்களின் படங்களிலிருந்து ஆராய்ந்த கருத்துக்களையே நமது முன்னோர்கள் கூறியுள்ளனர்.

பலர் பலன்களை சீக்கிரம் சொல்லுங்கள் என்கிறார்கள். கையை நன்கு ஆராயாமல், கிரகங்களின் உச்ச நிலையை அறியாமல் அவசரப்பட்டு பலன்களை கூறக்கூடாது. பலன்களை தெரிந்து கொள்ள பிரியப்படுவோரும் பொறுத்து கேட்க வேண்டும். வருங்கால பலன்களை நிச்சயமாக கூற முடியாது என்று பலர் எம்மிடம் கூறுகிறார்கள். இது தவறு. வருங்காலப் பலன்களை கண்டிப்பாக அணுவும் பிசகாமல் கூறலாம். ஆனாலும் ஒரு குறிப்பு இவ்விடம் கூறப் பிரியப்படுகிறேன். ஒருவர் கையில் விதி ரேகையும், தன ரேகையும் நன்கமைந்திருந்தால் முயற்சியில்லாமலேயே இவர்களை தேடிக்கொண்டு செல்வம் வராது. முயற்சி செய்தால் தான் மேலும் மேலும் செல்வமும் புகழும் அடைகிறார்கள். அதுபோல் எவரும் செய்யக்கூடிய தொழிலில் முயற்சியும் ஊக்கமும் கொண்டு இருக்க வேண்டும். அப்பொழுது தான் நல்ல பலன்களை ரேகைகள் காட்டுகின்றன. உதாரணமாக வைரம் தங்கத்துடன் ஆபரணமாக செய்யப்பட்டு தேகத்தில் பூட்டிக்கொள்ளும் பொழுது தான் அதன் மதிப்பும் தோற்றமும் மேனபடுகிறது. அல்லாமல், பூமியில் புதைந்து இருக்கும்பொழுது தங்கத்திற்கு மதிப்பு இருந்தாலும் அழகு ஏற்படுவதில்லை.

(முற்றிற்று.)

✷

பிரதாப சிம்மன்

(முன் பக்கத் தொடர்ச்சி)

போக்கு அவளுக்கு எல்லையில்லாத திகிலைத்தந்தது.

திடீரென்று ‘ஐயோ’ என்ற கூக்குரல் வானைப்பிளந்தது. ராணி துர்க்காவும், ராணா பிரதாப சிம்மனும் திடுக்கிட்டனர். துர்க்கா தன் குழந்தைகளை விட்டிருந்த இடத்தை நோக்கி ஓடினாள். என்ன பயங்கரம்?

காட்டுப்பூனை ஒன்று தன் வாயில் கௌவிய ரொட்டித் துண்டுடன் ஓடிக்கொண்டிருந்தது. குழந்தை தன் வலது கரத்தில் அப்பூனையால் கீரப்பட்ட காயத்துடன் வீறிட்டு அலறிக்கொண்டிருந்தது.

ராணி துர்க்கா படீரென்று தரையில் வீழ்ந்தாள். அவள் கண்கள் எல்லை மீறிய கோபத்தினாலோ அன்றித் துக்கத்தாலோ சிவந்து கிடந்தன. அவள் தோற்றம் பராசக்தியின் கோர அவதாரமான துர்க்கையின் சொரூபத்தைப்போலக் காணப்பட்டது. “ஐயோ என் குழந்தை பஞ்சணையில் படுத்துறங்க வேண்டியவன் புல் தரையில் உறங்கினாலும் சகித்துக் கொள்வேன். வறுமையையும், வெட்டுக்காயத்தையும், பசியையும் கூடவா என் மகன் அனுபவிக்க வேண்டும்,” என்று அங்கலாய்த்தாள் அவள்.

பிரதாப சிம்மன் வீரன் தானே! அவன் நெஞ்சம் குமுறியதே தவிர அவன் கண்கள் கலங்கவில்லை. “துர்க்கா எழுந்திரு. டே அமர், எங்கேயடா போய்விட்டாய்? உடனே அக்பரிடம் தூது போய் வா. ராணா பிரதாப சிம்மன் சமாதானத்துக்குத் தயார் என்று தெரிவித்துவிடு. இனி அவன் அடிமை,” என்று கூக்குரலிட்டான மன்னன். அடிமை என்ற வார்த்தையை அவன் உச்சரிக்கும் போது அவன் குரலில் நடுக்கம் காணப்பட்டது. குனிந்த தலையுடன் தன் மகனை வாரி எடுத்து அணைத்துக்கொண்டான். உள்ளத்தில் பொங்கி வந்த துயரத்தைத் தடுப்பதற்கு முயற்சி செய்யாமல் தன் மகனின் கையில் வழிந்த குருதியைத் துடைத்தான் அவன்.

ராணி துர்க்கா தனக்கு ஏற்பட்ட வீழ்ச்சியிலிருந்து எழுந்து கொள்ள வெகு நேரம் சென்றது. அமர்சிங்கின் குதிரை காற்றினும் கடிய வேகத்தில் அக்பரின் அரண்மனையை நோக்கிப் பறந்தது

(அடுத்த இதழில்)

✷

சத்ரபதி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யர் படையின் முழுப் பொலிவும் அவற்றில் காணப்பட்டது. சிவாஜி மலைப் பிராந்தியங்களிலிருந்து, தெற்கே படையெடுத்துச் சென்ற மொகலாயப் படையை நன்றாக கவனித்திருக்க வேண்டும்.

பீஜபுரி சுல்தான் அலி அவுரங்க சீபின் படையெடுப்பைக் கேட்டு நடுக்கமுற்றுப்போனான். அவருக்குத் தன் பிரஜா பக்தியைக் குறித்து நீண்ட, தாழ்மையான கடிதங்கள் எழுதினான். ஆனால் பீஜபுரியை அழிக்க விரும்பிய அவுரங்க சீபுக்கு இக் கடிதங்களின் மூலம் என்ன திருப்தி ஏற்பட முடியும்?

மொகலாயர் படையெடுத்த கையோடு வடக்கேயிருந்த ஏராளமான மக்கள் தம் கைவசமிருந்த தானியங்களை எரித்துப் பாழாக்கிவிட்டு பீஜபுரி நோக்கிப் பறந்து சென்றுவிட்டனர். இவ்வாறு பீஜபுரி நகரம் அகதிகள் நிறைந்த ஒரு குழப்பமாகப் போயிற்று (தொடரும்)

சிவாஜி

சந்தா விபரம்

ஒரு வருடம்	ரூ.	7—0—0
ஆறு மாதம்	ரூ.	3—8—0

எங்கும் சிறந்து விளங்குவது

L G

ரிஜிஸ்டர் இஞ்சின் டிரேட் மார்க்

பெருங்காயம்

L. G. & CO., Head Office:
KUMBAKONAM - BOMBAY.

லால்ஜீ கோது & கோ,

— கும்பகோணம் —

அமிர்தாஞ்சன்

சகல வலி நோவுகளுக்கும்

கைகண்ட மருந்து

எங்கும் கிடைக்கும்

அமிர்தாஞ்சன் லிமிடெட்.,

சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

பிலிப்ஸ் ரேடியோக்கள் !

ஹாலந்து, அமெரிக்கா & இந்தியாவில் செய்தவை விலை ரூ. 195/-லிருந்து ரூ. 1200/-வரைகிடைக்கும்

சௌத் இந்தியன் ரேடியோ ஹவுஸ்

(ந. மு. பில்டிங்ஸ்)

பாலக்கரை :: திருச்சிராப்பள்ளி.

ரேடியோ ரிப்பேர்!

பிலிப்ஸ் ரேடியோக்களும், இதர ரேடியோக்களும் திருப்திகரமாக ரிப்பேர் செய்து கொடுக்கப்படும்.

Regd. No. M. 3398 SHIVAJI 17—4—49 Estd. 1935

பார்லிமெண்ட் அங்கத்தினருக்கு தபாலாபீஸ்

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கென்று சமீபகாலமாக இயங்கும் தபாலாபீஸ் அற்புதமாக வேலைசெய்து வருகிறது. அதுபற்றிய முழு விபரங்களையும் வில்ஸன் கெண்ட் என்பவர் இங்கு கொடுக்கிறார்:—

பிரிட்டிஷ் பார்லிமெண்டின் ஒரு பகுதியான பொதுமக்கள் சபைக்கென தனியாகவே ஒரு தபாலாபீஸ் உள்ளது. இத்தபாலாபீஸ் அங்கத்தினர்களின் 'லாபி'க்கருகிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. இத்தபால் காரியாலயம் காலை ஆறுமணிக்கு திறக்கப்படுகிறது. ஆனால் எப்போது வீடு திரும்புவோம் என்பது காரியாலய சிப்பந்திகளுக்குத் தெரியாது. ஏனெனில் இத்தபாலாபீஸ் 'சபைகலைந்த அரைமணி நேரத்திற்குப்பின்'' மூடப்படுமென்று விதி உள்ளது. ஆகவே இத்தபாலாபீஸ் இத்தனை மணிக்குத்தான் மூடப்படுமென்று திட்டமாக கூறுவதற்கில்லை. அத்துடன் சில சமயங்களில் பொதுமக்கள் சபை இரவு முழுவதும்கூட நடைபெறுகிறது.

தபால் பட்டுவாடா தந்தி கேபிள்கள் பட்டுவாடா, டெலிபோன் சர்வீஸ் உட்பட சகல சௌகரியங்களும் இத்தபாலாபீசில் உள்ளன. பார்லிமெண்ட் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் அங்கு பிரத்யேகமாக ஒரு பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. காலை 8½ மணிக்குள் அங்கத்தினர்களுக்கான தபால்கள் அவரவர்களிடம் சேர்க்கப்படுகின்றன.

இத்தபாலாபீசின் தந்தி அறையில் சகலவிதமான நவீன டெலிபிரிண்டர், டெலிகிராப் சாதனங்களும், டெலிபோன்களும் பொருத்தப்பட்டுள்ளன. பார்லிமெண்ட் கூடும் நாட்களில் தந்தி ஆபீசில் ஏகப்பட்ட வேலைகள் இருக்கின்றன. இதைத்தவிர பிரைவேட் டெலிபோன் எக்ஸ்சேஞ்ஜ் ஒன்றும் தபாலாபீசில் உள்ளது. இந்த எக்ஸ்சேஞ்ஜ் இரவு, பகல் 24 மணி நேரமும் வேலை செய்கிறது. அங்கத்தினர்களுக்கு வரும் அவசரத் தபால்களை தாமதியாமல் உடனடியாக பட்டுவாடா செய்ய வேண்டியிருப்பதால் காரியாலய சிப்பந்திகள் தங்களுடைய முக்கிய அலுவல்களைத் தவிர பார்லிமெண்ட் அங்கத்தினர்களுடன் நேரடியான தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது. சம்பந்தப்பட்ட அங்கத்தினரின் தபால்களை உடனடியாக பட்டுவாடா செய்ய நல்ல ஞாபகசக்தியும் தேவைப்படுகிறது. ஏனெனில் அங்கத்தினரின் விலாசத்தை அறிய புஸ்தகங்களை அடிக்கடி பார்த்துக்கொண்டிருப்பதற்கு அங்கு அவகாசம் கிடையாது.

தந்தி பட்டுவாடா

பல இடங்களிலிருந்தும் அங்கத்தினர்களுக்குத் தகவல்கள் வந்துகொண்டேயிருக்குமாதலால் அதற்கான பதில்கள் கொடுப்பதிலும் தபாலாபீஸ் மிக்க கவனத்துடன் இருக்கவேண்டியிருக்கிறது. சிக்கலான கேள்விகளுக்குத் தக்கபதில்கள் பெற்றுக்கொள்வதற்கென பல நிபுணர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வேலை அடிக்கடி மாறிக்கொண்டேயிருக்கும். உதாரணமாக சில அங்கத்தினர்களுக்கு பிடிக்காத மசோதா ஒன்று சபையில் பிரேரேபிக்கப்பட்டிருக்கிறதென வைத்துக்கொள்வோம். உத்தேச மசோதாவைப்பற்றிய தங்களுடைய அபிப்ராயங்களைப்பற்றியும் அதற்கு எவ்விதம் வோட்செய்ய வேண்டுமென்பதைப் பற்றியும் அங்கத்தினர்களுக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கடிதங்களும், தந்திகளும் வந்து குவிந்து கொண்டேயிருக்கும். அங்கத்தினர்களிடம் தந்திகளை விரைவில் சேர்ப்பதில் மிக்ககவனம் செலுத்தப்படுகிறது. இத்தந்திகளைபட்டுவாடா செய்வதற்கென பிரத்யேகமாக நபர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். அங்கத்தினர்களுக்கு வரும் தந்திகளை தாமதியாமல் பட்டுவாடா செய்தே ஆகவேண்டும். ஆகவே ஒவ்வொரு அங்கத்தினருடனும் தொடர்பு கொண்டிருக்க சகல முயற்சிகளும் செய்யப்படுகின்றன.

சபையின் அன்றாட நடவடிக்கைகள் உடனுக்குடன் மன்னருக்கு அறிவிக்கப்படுகிறது. வெஸ்ட் மின்ஸ்டரில் மட்டும் 600-க்கு மதிகமான டெலிபோன்கள் உள்ளன. இவைகளைத்தவிர பத்திரிகை நிருபர்களுக்கென தனியாக டெலிபோன்கள் உள்ளன. ஒவ்வொரு அரசாங்க இலாகாவும் டெலிபோன் மூலம் சபையுடன் இணைக்கப் பட்டுள்ளது. தபாலாபீசின் எஞ்ஜினீர்கள் எப்பொழுதும் டெலிபோன் தந்தி சாதனங்களை பழுது ஏற்படாமல் கவனித்து வருகின்றனர். சபையின் அங்கத்தினர்களுக்கென 22 தபால் பெட்டிகள் உள்ளன. இப்பெட்டிகளிலிருந்து மணிக்கு ஒரு தடவை வீதம் தபால்கள் சேகரிக்கப் படுகின்றன.

—வில்ஸன் கெண்ட்

மின்சார 'சமையல்காரி'

வரும் மே மாதம் லண்டனிலும் பர்மிங்ஹாமிலும் நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் கைத்தொழில் சந்தையில் காட்டப்படவிருக்கும் பல்வேறு நூதன அம்சங்களில் மின்சார சமையல்காரியும் ஒன்றாகும். உலகிலுள்ள சகல மனைவிமார்களுக்கும் இந்த 'சமையல்காரி' ரொம்ப பிடித்துவிடுமென இதைத் தயாரிக்கும் ஸ்தாபனம் கூறுகிறது. வட இங்கிலாந்து தொழில் ஸ்தாபனமொன்றினால் தயாரிக்கப்படும் இந்த 'சமையல்காரி' உருளைக்கிழங்குக்கு தோலுரிக்கிறது; இறைச்சியை துண்டுதுண்டாக வெட்டித் தருகிறது; பாத்திரங்களை துடைக்கிறது; காப்பிக்கொட்டையை அரைக்கிறது; பாகுகளைகிளறுகிறது; துணிகளைத் துவைக்கக்கூடிய சாதனத்தையும் இதில் சேர்க்கமுடியுமா என்பதைப்பற்றியும் ஆராய்ச்சிநடந்து வருகிறது.

பிசகுகளை கண்டுபிடிக்கும் "மூளை"

மற்றொரு வட இங்கிலாந்து தொழில் ஸ்தாபனமொன்று "தானாக இயங்கும் மூளை'' என்ற ஒரு நவீன சாதனத்தை பிரிட்டிஷ் சந்தையில் காட்டப்போகிறது. நாம் வீடுகளில் உபயோகிக்கும் மின்சார சாதனங்களில் ஏற்படும் கோளாறுகளைக் கண்டுபிடித்து அது எங்கு ஏற்பட்டுள்ளதென்பதையும் இச்சாதனம் நமக்குத் தெரிவிக்கும். உதாரணமாக நாம் சோதனை செய்யும் சாதனத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளதென்று வைத்துக்கொள்வோம். உடனே இம் 'மூளை' தன்மீதுள்ள ஒரு 'குறிவிளக்கை' எரியச் செய்வதன் மூலம் கோளாறு இருக்கிறதென்பதை காட்டுகிறது. இதை உபயோகிப்பதும் மிகச்சாதாரணமான வேலைதான். நாம் சோதனை செய்ய விரும்பும் சாதனத்தின் மீது 'இம் மூளை'யை பொருத்தவேண்டிய ஒரு வேலைதான்.

புதிய மருந்து

மூன்றுவித வியாதிகளைக் குணப்படுத்தக்கூடிய புது மருந்தொன்று வரும் மே மாதம் நடைபெறும் பிரிட்டிஷ் கைத்தொழில் சந்தையின் ஒலிம்பியா பிரிவில் இடம் பெறப்போகிறது. யுத்தப் புகையாக உபயோகிக்க முடியுமா என்பதுபற்றிகூட இது ஒரு சமயம் பரிட்சை செய்து பார்க்கப்பட்டது.

டெலிவிஷன் நிலையம்

ஐரோப்பாவிலேயே மிகப் பிரமாண்டமான ரேடியோ டெலிவிஷன் நிலையமொன்று லண்டனில் நிர்மாணிக்கப்படவிருக்கிறது. இப்புதிய நிலையத்திற்கான கட்டிடங்கள் கட்டுவதற்காக பிரிட்டிஷ் வானொலி நிலையம் கேட்டிருந்த 13 ஏகரா மனைக்கட்டை ஒதுக்க லண்டன் கவுண்டி கவுன்சில் அங்கீகாரம் செய்துள்ளது. கடந்த சில வருடங்களாக ஒலிபரப்பும், டெலிவிஷனும் அதிகம் வளர்ச்சி அடைந்து வருவதால் பிரிட்டிஷ் வானொலி நிலையம் ஸ்தலபற்றாக்குறையை எதிர்நோக்கவேண்டியிருக்கிறது. பி. பி. ஸி. நிலையத்திற்கான எக்ஸ்டென்ஷனும் கட்டப்படவிருக்கிறது. டெலிவிஷன் சர்வீசுகளை விஸ்தரிப்பதற்கான பெரும் திட்டங்களும் தற்போது கைவசமுள்ளன.

Printed at Trichinopoly United Printers Limited., Trichinopoly, and Published by Thiruloka-Sitharam (Editor).